
Laodicean Times

# லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு12 தொகுதி 3 ஜூலை - செப்டம்பர் 2022



R 5486

## "சிந்தையும் சித்தமும்"

## "MIND AND WILL"

ஒரு தனி நபர் புது சிருஷ்டியாக எண்ணப்படுவதற்கு முன்பே, சரீரத்தின் சித்தம் மரித்துவிட்டது. சிந்தை மற்றும் சித்தம் என்ற வார்த்தைகள் அடிக்கடி மாறிமாறி பயன்படுத்தப்பட்டாலும், இவைகளுக்கிடையே உள்ள வித்தியாசத்தை பார்க்க வேண்டியது நமது கடமையாகிறது.

மாம்ச சித்தம் உண்மையிலேயே மரிக்கிறது, நாம் ஒரு புதிய சித்தத்தை, பரிசுத்த சித்தத்தை,தேவசித்தத்தை நம் சித்தத்துக்கு பதிலாக பெறுகிறோம். அந்த சித்தம் பரிசுத்தமாயிருப்பதற்கு நிரந்தர தடை ஏற்படுத்தி, மாம்சத்தின் சித்தத்துக்கு மீண்டும் திரும்புமானால் அது, "அழிவுக்கென பின்னிட்டுத் திரும்புகிறது" என்று அப்போஸ்தலர் எச்சரிக்கிறார். சித்தம் அவ்வாறு மாறுதலடைவது, கழுவப்பட்ட பன்றி மீண்டும் சேற்றில் புரள திரும்பியதற்கொப்பாயிருக்கும் என்று அப்.பேதுரு கூறுகிறார். யார் மாம்ச சித்தத்துக்கு மனப்பூர்வமாயும் துணிகரமாயும் திரும்புகிறார்களோ, அவர்கள்,"இரண்டு தரஞ்செத்த வேரற்றுப்போன மரங்கள்" என விவரிக்கப்பட்டுள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவோமானால், மாம்சத்துக்குரிய சித்தம் மறுபடியும் உயிர்ப்பிக்கப்பட்டது என்றும், ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட புதிய சித்தம் மரித்துவிட்டது என்றும் பொருளாகும்.

ஆனால் சிந்தையுடன் இது வேறுபட்டதாயிருக்கிறது. சரீரத்தின் ஒரு பகுதியே சிந்தை. சரீரமோ தன் மாம்சத்துக்குரிய பசி, நாட்டங்கள், விருப்பங்களை கொண்டிருந்து, புதிய சித்தத்தின் தீர்மானத்துக்கு எதிராக பூமிக்குரிய உரிமைகளுக்காக தொடர்ந்து கூக்குரலிடுகிறது. எனவே மாம்ச சிந்தை மரிக்கவில்லை, இல்லையென்றால், அது புதிய சித்தத்தின் ஆவிக்கு, அதாவது கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதிய சிருஷ்டியின் ஆவிக்கு எதிராக கூக்குரலிடவும் போர்புரியவும் முடியாது – கலாத் 5:17.

இப்படிப்பட்ட தெளிவான வேறுபாடுகள் வேதாகமத்தில் மட்டுமே காணப்படுகின்றன. ஒருவேளை இதை ஒருவராலும் மதித்துணராவிடினும், வேதமாணவரே மதித்துணருகின்றனர். ஆகவே ஒரு தனிமனிதன் ஒரு புது சிருஷ்டியாக எண்ணப்படுவதற்கு முன்பாக,"மாம்ச சிந்தை மரித்ததாக எண்ணப்படுகிறது" என்று கூறுவது சிறந்ததாயிருக்கும்.

அப்போஸ்தலருடைய அறிக்கையும் இதே நடையிலேயே உள்ளது, "நீங்கள் பாவத்துக்கு மரித்தவர்களாயும், தேவனுக்கென பிழைத்திருக்கிறவர்களாயும் உங்களை எண்ணிக்கொள்ளுங்கள்". மீண்டுமாக நாம் வாசிக்கிறோம்; "பூமியிலுள்ள உங்கள் அவயவங்களை மரிக்கப்பண்ணுங்கள்" – அதாவது, மாம்ச சிந்தை மரிக்கப் பண்ணுங்கள். உங்கள் மாம்ச சிந்தையை மரிக்கச்செய்வது அல்லது அழிப்பது என்பது, மரித்ததாக கருதப்படுகின்ற, ஆனால் நிஜமாகவே மரிக்காத பழைய சிருஷ்டிக்கெதிராக புதிய சித்தத்தின் பங்கில் ஒரு தொடர்ச்சியான போராட்டம் போராடுவதை அர்த்தப்படுத்துகிறது.

--------

### இம்மாத வெளியீட்டில்


.. சிந்தையும் சித்தமும் ... 1
.. தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டவன் ... 2
.. வாய்ப்புக்களுக்கு உண்மையாயிருத்தல் ... 5
.. முன்மாதிரிகையின் முக்கியத்துவம் ... 10
.. கிறிஸ்துவின் வெற்றிப் பிரவேசம் ... 12


*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

R 5491

# “தேவனால் ஜெநிப்பிக்கப்பட்ட எவனும் பாவஞ்செய்யான்”

## “HE THAT IS BEGOTTEN OF GOD DOES NOT PRACTICE SIN”

“என் பிள்ளைகளே நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்குஇவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப்பிதாவினிடத்தில் பரிந்துபேசுபவராயிருக்கிறார்” – 1யோவான் 2:1.

வரலாறு கூறுகின்றபடி, அப்போஸ்தலனாகிய யோவான் இந்நிருபத்தை எழுதும்போது, மிகவும் வயதான மனிதராக இருந்தார். பாரம்பரியம் கூறுவதுபோல், அவரே அப்போஸ்தலர்களில் கடைசியாக மரித்தவராக இருந்தார். அவரது முதிர்ந்த வயதில், அவர் இயற்கையாகவே அனைத்து சபைகள்மீதும் ஒரு மென்மையான, தகப்பன் ஸ்தானத்துக்குரிய உணர்வினைக் கொண்டிருந்தார். அவர் தனது அனுபவங்களின் மூலம் மிகவும் கனிவான குணம் கொண்டவராக மாறியிருந்தார். மூலப்பிரதியின்படி, நமது ஆதார வசனம் பின்வருமாறு வாசிக்கப்படுவது இன்னும் சரியாக இருக்கும் : “என் அன்புக்குரியவர்களே(My darlings) .. இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்”. இதற்குப் பதிலாக மொழிபெயர்ப்பாளர்கள் “சிறுபிள்ளைகளே” என்று கூறும் சுதந்திரத்தை எடுத்துள்ளனர், ஒரு சிறு பிள்ளை எப்போதுமே அன்புக்குரியதாகவே கருதப்படுகின்றது.

“இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த சீஷன்” (யோவான் 13:23) என்று பரிசுத்த யோவானைக் குறித்து விசேஷித்தவிதமாகப் பேசப்பட்டது. இது அப்போஸ்தலரின் சொந்த சாட்சியமாயிருக்கின்றது. அவர், பெரும் ஆற்றலோடு இணைந்த, விசேஷித்த அன்பின் சுபாவம் கொண்டவராக காணப்பட்டார். இப்போது அவரது பூலோக யாத்திரை முடிவடைய சமீபித்திருந்ததால், அவரது இருதயம் தேவனுடைய “சிறு பிள்ளைகளுக்கு ” நேராய் அன்பின் கரிசனம் கொண்டிருந்தது. நமது ஆதார வசனத்துக்கு முந்தைய அதிகாரத்தில் (1யோவான் 1), பாவம் என்பது அனைவரையும் பாதிக்கும் சீர்கேட்டின் ஒரு இயல்பு என்று சுட்டிக்காட்டியிருந்தார். யாரொருவன் தன்னில் பாவமில்லையென்கிறானோ, அவன் தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாயிருப்பான் – அவன் ஒரு பொய்யனாயிருப்பது மாத்திரமல்லாமல், தேவனையும் பொய்யராக்குகிறான் என்று அப்போஸ்தலர் அறிவித்தார். வேதவாக்கியங்களும் உண்மைக் கூற்றுகளும் சாட்சியளிக்கும் வண்ணமாக, நாம் அனைவரும் பாவிகளாக இருக்கிறோம். நமக்குள் பாவமில்லையென்போமானால், நம் பாவங்களை நாம் ஒப்புக்கொண்டு சுத்திகரிப்பதற்கு விண்ணப்பம் செய்வதில் பிரியப்படுகிற, முடிந்தவரை நம் பாவத்தை நீக்கத் தேடுகிற தேவனை நாம் மனம்வருந்தச் செய்கிறோம் என்பதைப் பரிசுத்த யோவான் இவ்வண்ணமாக நம் மனதில் பதிய வைக்கிறார்.

“நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்” என்று அப்போஸ்தலன் கூறுகிறார். “ஆம், நாம் அனைவரும் பாவிகளே, ஆனால் நம்மால் அதற்கு உதவமுடியாது, ஆகவே பாவத்தில்தான் தொடர்ந்தாக வேண்டும்” என்று அவர் கூறவில்லை. மாறாக, அவர்கூறுவது: உங்கள் இருதயத்தின் வாஞ்சைக்கு விரோதமான மீறுதல்களைச் செய்துவிட்டீர்கள் என்பதை நீங்கள் உணரும்போது, உங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, மன்னிப்பு அடைவதற்கு நீங்கள் செல்லவேண்டிய கிருபாசனமாகிய ஓர் இடம் உள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள்”. “நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார்” என்பதை நினைவில் கொள்ளுங்கள்”. “அவர் எல்லோரையும் மீட்கும்பொருளாகத்” தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் என்பதையும் மேலும் இந்தக் கிரயத்தின் புண்ணியம் நம் நிமித்தமாக சுமத்தப்படுதலின் மூலமாக பொருந்தப்பண்ணப்பட்டது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்”. “மாம்சத்தின் எல்லாப் பாவங்களும், அவருடைய இரத்தத்தின்மேல் வைக்கும் விசுவாசத்தின் மூலம் மன்னிக்கப்படக்கூடியவை என்பதை நினைவில் கொள்ளுங்கள். “நமது அபூரண மாம்சத்தில் இருந்துகொண்டு புதிய சிருஷ்டிகளாக நம்மால் பரிபூரணமாக எதையும் செய்யமுடியாது என்பதை அவர் அறிந்திருக்கிறார் என்பதையும், இதன் காரணமாகவே, தேவன் இயேசுவைப் பரிந்துபேசுகிறவராகவும், எல்லாவற்றிற்கும் மேலான தலையாகவும் தந்துள்ளார் என்பதையும்கூட மனதில் கொள்ளுங்கள்.

### நமது பிரதான ஆசாரியர் பாவமன்னிப்பு அருளுகின்றார்

மாம்சத்தின் பலவீனங்களினால் நாம் அனைவரும் குறைவுபடுகிறோம் என்பதை நமது பிதா அறிந்திருக்கிறார். நம்மைப் பாவத்திலிருந்து விடுவித்து பிதாவிடம் நம்மை ஒப்புரவாக்க இயேசு தம்முடைய ஜீவனைக் கையளித்தார், அத்துடன் இந்தச் சுவிசேஷயுகத்தில் பாவத்தைவிட்டு விலகி தங்களுடைய ஜீவியங்களை அவருடைய ஊழியத்திற்காக அர்ப்பணிக்கின்ற அனைவருக்கும் பரிந்துபேசுகிறவராக அவர் தேவனுடைய சமுகத்தில்

பிரசன்னமாகியிருக்கிறார். இவ்வாறு கிறிஸ்துவின் நீதியானது, அவர் செலுத்திய பாவத்திற்கான மாபெரும் பலியின்மூலம் (அவருடைய சொந்த சரீரம்) நமது பாவ மன்னிப்புக்கான ஒர் அடிப்படையாக இருப்பதைக் காண்கிறோம். மேலும் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதாலும், நாம் அவருடைய புத்திரர் எனும் உறவுக்குள்ளாக வந்துள்ளதாலும், அனுதின குறைபாடுகளுக்கான இரக்கத்திற்காகவும், மன்னிப்புக்காகவும் கிருபாசனத்தண்டை சேரும் ஆசீர்வாதமும் பாக்கியமும் நமக்கே உரித்தாயிருக்கின்றன. இயேசுவினால் அருளப்பட்ட புண்ணியத்தின் மூலம், நாம் பிதா முன்பாக நிற்கக்கூடிய ஒரு நிலைமையைப் பெற்றுள்ளோம். இயேசு தேவஜனங்களைத்தவிர, மற்றவர்களுக்காக பரிந்துபேசுவதில்லை. அவர் உலகத்திற்காகப் பரிந்துபேச வேண்டுமென்பது பிதாவின் நோக்கமல்ல; உலகத்துடனான தேவனுடைய கையாளுதல் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும்.

இப்போது நம்முடைய பரிந்துபேசுபவராக இருப்பவர், விரைவில் சபை வகுப்பாரைத் தமதாக்கிக் கொள்ளுவார். பின்னர், மெல்கிசேதேக்கின் முறைமையின்படி, ஒரு மாபெரும் ஆசாரியராக, அவர் ஆயிரமாண்டளவும் உலகத்தை ஆளுகை செய்வார் – பரிந்துபேசுபவராக இல்லாமல், மாறாக தேவனுக்கும் விழுந்துபோன மனிதனுக்கும் இடையே மத்தியஸ்தராக இருந்து, ஆளுகை செய்வார். அவர் இந்தஆயிரமாண்டு அரசாட்சியின்போது, உலகத்திற்குத் திரும்பக் கொடுத்தலின் பணியைச் செய்வார், மேலும் அந்தக் காலகட்டத்தின்போது, அருளப்படும் சிலாக்கியங்கள் மற்றும் ஆசீர்வாதங்கள் ஆகியவற்றை பயன்படுத்தும் அனைவரையும் பரிபூரணத்திற்குக் கொண்டுவரச்செய்வார். ஆயிரமாண்டின் முடிவில் மனுக்குலம் பரிபூரணமடையும்போது, மேசியா அவர்களை பிதாவிடமே ஒப்படைப்பார். அவர்கள் பரிபூரணமாகிவிட்டபிறகு அவர்களுக்கு ஒரு மத்தியஸ்தர் தேவைப்படாது. இவ்வாறாக, திருச்சபைக்காக கிறிஸ்துவின் பரிந்துபேசுதல் எனும் தற்போதைய பணிக்கும் , மத்தியஸ்தராக உலக மனுக்குலத்திற்கான அவரது எதிர்கால பணிக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நாம் காண்கிறோம்.

## முரண்பாடுகளாகத் தோன்றியவை இசைவாக்கப்பட்டன

அதே நிருபத்தில் அப்போஸ்தலனாகிய யோவான், “தேவனால் ஜெநிப்பிக்கப்பட்ட எவனும் பாவஞ்செய்யான்” என்று கூறுகிறார்(1யோவான் 5:18). இது எப்படி உண்மையாக இருக்கமுடியும்? அப்போஸ்தலர் தனக்குத்தானே முரண்படுகிறாரா? அவர் இங்கே “தேவனால் ஜெநிப்பிக்கப்பட்ட எவனும் பாவஞ்செய்யான்” என்று கூறிவிட்டு, நமது ஆதார வசனத்தில் நாம் பாவம் செய்யும் ஆபத்து இருப்பதாகக் கூறுகிறாரா? மறுபடியும் நமக்குள் பாவமிருப்பதை மறுத்தால் நாம் பொய்சொல்லுகிறவர்களாக இருப்போம் என்று கூறுகிறாரா? அப்படியானால் “தேவனால் ஜெநிப்பிக்கப்பட்ட எவனும் பாவஞ்செய்யான்” என்ற வாக்கியத்தின் அர்த்தந்தான் என்ன?

பரிசுத்த சித்தமுள்ள புதிய ஆத்துமாவாகிய புதிய சிருஷ்டியே தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டது என்று நாங்கள் பதிலளிக்கிறோம். ஆனால் இந்தப் புதிய சிருஷ்டியோ அழிவுக்குரிய சரீரத்தினைப் பெற்றிருந்து, அதில் மாத்திரமே தற்போது அது இயங்கவேண்டியிருக்கிறது. உயிர்த்தெழுதலின்போது புதிய சிருஷ்டிக்கு ஒரு புதிய சரீரத்தைக் கொடுப்பதாக தேவன் வாக்களிக்கின்றார். இருப்பினும், இதற்கிடையில், மனித சரீரத்தின் தற்போதைய குறைபாடுகளின்கீழ் அவர் (புதிய சிருஷ்டி) ஜீவிக்க வேண்டியிருக்கிறது. மேலும் தனது மாம்சத்தில் வேரூன்றியிருக்கும் பலவீனங்கள் மற்றும் பாவங்களுக்கு எதிராக, அவரது நல்ல போராட்டத்தின் மூலம் அவர் தேவனுக்கும் நீதியின் கொள்கைகளுக்குமான தனது உண்மைத்தன்மையையோ அல்லது தனது உண்மையற்ற தன்மையையோ காட்டுவார். அறியாமையினாலோ அல்லது தன்னால் கட்டுப்படுத்தமுடியாத சோதனையினாலோ அவர் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், அது புதிய சிருஷ்டியின் பங்கில் பாவமாக இருக்காது. மாறாக மாம்சத்தின் பலவீனமாக இருக்கும். ஆயினும்கூட, அவர் இந்த மீறுதல்களுக்கான மன்னிப்பு வேண்டி தேவனிடம் சென்றாக வேண்டும்.

ஆனால் புதிய சிருஷ்டி பாவஞ்செய்வதில்லை – அவர் “பாவத்தை நடப்பிப்பதில்லை”(does not practise sin) என்று எம்பாடிக் டயக்லாட் பதிப்பு, இந்த வசனப்பகுதியை மொழிபெயர்த்துள்ளது. பாவத்தை விரும்புகிறவன் பாவஞ்செய்வான்; பாவத்தை விரும்பாதவரோ மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்யமாட்டார். அவர் தனது பலவீனமான மாம்சத்தின் பொறியில் சிக்கியிருக்கலாம், அல்லது எதிராளியின் கண்ணியில் அகப்பட்டிருக்கலாம். ஆனால் இது அவரது தரப்பில் மனப்பூர்வமானதாய் இருந்திருக்காது. மேலும், நமது பரிந்துபேசுபவராகிய இயேசு, அத்தகைய பாவங்களுக்காகப் பரிந்துபேசுவாரே ஒழிய, மனப்பூர்வமாய்ச் செய்த பாவத்திற்காக அல்ல. புதிய சிருஷ்டியின் மனப்பூர்வமான பாவங்களுக்காக இயேசு மரிக்கவில்லை. மாறாக, விழுகையினிமித்தமான பாவங்களுக்காக – ஆதாமின் பாவத்திற்காகவே மரித்தார்.

எனவே, யாரேனும் புதிய சிருஷ்டியாக மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்தால், அவர் அதினிமித்தம் அழிந்துவிடுவார். நமது முதலாம் ஜீவன் ஆதாமில் இருந்தது, நமது முதலாம் மரணமும் ஆதாமுக்குள்ளான மரணமாக இருந்தது. நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, நமக்குள் புதிய சிருஷ்டி ஜெநிப்பிக்கப்பட்டதுமே நமது இரண்டாம் ஜீவன் ஆரம்பமாகியது. இப்போது அப்படிப்பட்ட ஒருவர் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்து குற்றவாளியாயிருப்பாரானால், இனி ஒருக்காலும் அவர் தேவனுக்கு முன்பாக எந்த நிலைப்பாட்டையும் கொண்டிருக்க முடியாது, அவர் மீண்டும் மரணதண்டனையின்கீழ், அதாவது இரண்டாம் மரணத்தின் கீழ் வருவார்.

### புதுசிருஷ்டியில் காணப்படும் மந்த நிலை

தற்செயலாகவே, சில நேரங்களில் ஒரு வகையான கலப்பான நிலைமை இருப்பதையும் நாம் இங்கே குறிப்பிடலாம். அதாவது, புதிய சிருஷ்டியானது சோதனைக்கு எதிராக தன்னைக் காத்துக்கொள்வதில் அலட்சியமாக இருந்து, ஓரளவு குற்றப் பொறுப்புடன் அதற்கு இணங்கியும்போயுள்ளது என்பதாகும். புதிய சிருஷ்டி எந்தளவிற்கு வீழ்ச்சியடைந்து அலட்சியமாக இருந்திருக்கிறதோ, அந்தளவிற்கு கர்த்தருடைய முகம் அவருக்குக் இருண்டுவிடும்(darkened). மாம்சமானது தவறுசெய்யத் தொடங்கினால், புதிய சித்தம் அத்தவறுக்கு இணங்கவோ அல்லது அதனை அனுமதிக்கவோ கூடாது. புதிய சிருஷ்டியானது மாம்சத்தைஅழித்து, அதனை மரிக்கச் செய்யவேண்டும். இந்த விஷயத்தில் எந்தளவுக்கு அவர் மெத்தனமாக இருக்கிறாரோ, அந்தளவுக்கு அது பாவமாக இருக்கிறது. ஒரு முழுமையான பாவம் என்பது புதிய சித்தத்தின் முழு இணக்கத்துடன் இருக்கும், அதாவது தேவனிடமிருந்து முழுமையாக பின்வாங்கியதாக இருக்கும்.

ஆனால் மாம்சத்திற்கு சில வாஞ்சைகள் மற்றும் சோதனைக் கவர்ச்சிகள் இருக்கலாம். இதனால் ஓரளவு மனப்பூர்வமாய் பாவஞ்செய்யப்படக்கூடும். அத்தகைய சந்தர்ப்பத்தில், மனப்பூர்வத்தின் விகிதத்திற்கேற்ப அடிகள் விழும். அத்தகைய ஒரு நபர் ஆவிக்குரிய ரீதியில் நோய்வாய்ப்பட்ட நிலைக்கு சென்றுவிடக்கூடும். இதனால் கர்த்தர் அவரை தம்முடைய முகத்தின் ஒளியிலிருந்து முழுவதுமாக மறைத்துவிடுவார். அப்போஸ்தலனாகிய யாக்கோபு இதுகுறித்து குறிப்பிடுகையில், மேலே குறிப்பிட்ட தனிநபர், இரக்கம் பெறுவதற்கும், தனது முந்தைய நிலைக்கு சீர்பொருந்தவும், தன்னுடன் கிருபாசனத்திற்கு வந்து ஜெபிக்கும்படி, சபையின் மூப்பர்களிடம், சபையின் மூத்த சகோதரர்களிடம், ஆவிக்குரிய சிந்தையுடையோரிடம் கேட்டுக்கொள்வது மாத்திரமே சரியான நடவடிக்கையாக இருக்குமென்று அவர் சுட்டிக் காட்டுகிறார்.

மூத்த சகோதரர்களும், ஆவிக்குரிய சிந்தையுடையோரும் மூப்பர்கள் அல்ல, இவர்கள் இவ்வண்ணம் நோய்வாய்ப்பட்டவருக்கு இந்த ஊழியத்தைச் செய்யலாம். ஆனால் அவர்கள் சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட மூப்பர்களாக இருப்பது ஏற்புடையதாக இருக்கும். பாவ நோய்வாய்ப்பட்ட சகோதரருக்கு இந்த செயல்முறை மிகவும் வெட்கமுறச் செய்வதாக இருக்கும். ஆனால் அத்தகைய செயல்பாட்டின்மூலம் "தேவனுடைய பலத்த கரத்திற்குள்" சுயத்தைத் தாழ்த்துவதால், அந்த ஆத்துமாவை மரணத்திலிருந்து காப்பாற்றக்கூடும். இவ்வாறாக, இப்படிப்பட்ட ஒருவர் மீட்கப்பட்டு, மீண்டும் தேவனுடைய உண்மையான பிள்ளையாக மாறக்கூடும்.

### கிறிஸ்தவரே, கவனமாக நடங்கள்!

முறையான விழிப்புணர்வில் குறைவுபடுவதாலோ அல்லது மாம்சத்தின் சில பலவீனத்தாலோ, கர்த்தருடைய சித்தத்திற்கு மாறாகவும், கிறிஸ்துவின் புதிய சிருஷ்டிகளாகிய நமது நலன்களுக்கு மாறாகவும், தவறான அடியை எடுத்துவிட்டோம் என்பதை நாம் அடையாளங் கண்டு கொண்டோமானால், சற்றும் காலந்தாழ்த்தாது, எடுத்த தவறான அடியிலிருந்து திரும்பி, செய்த தவறுக்காக மன்னிப்பு அருளும்படிக்குப் பிதாவிடம் மன்றாடுவோமாக. "நமக்கு ஒரு பலிபீடமுண்டு, அதற்குரியவைகளைப் புசிக்கிறதற்குக் கூடாரத்தில் ஆராதனை செய்கிறவர்களுக்கு அதிகாரமில்லை"(எபிரேயர் 13:10). அது காளைகள் மற்றும் ஆடுகளின் இரத்தத்தால் அல்லாமல், மாறாக கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் பரிசுத்தமாக்கப்பட்ட ஒரு பலிபீடமாகும். ஆதலால், "நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய் (பரிசுத் தைரியத்துடனும், உறுதியான விசுவாசத்துடனும்) கிருபாசனத்தண்டையில் சேர" நாம் வலியுறுத்தப்படுகிறோம்(எபிரேயர் 4:16). நமது பரமபிதாவின் அன்பினால் அருளப்பட்ட இந்தக் கிருபாசனம்(throne of grace, this mercy seat) எவ்வளவு ஆசீர்வாதமானது – பாக்கியமானது! அது இல்லாதிருந்தால், நாம் எவ்வளவாய் அதமாகியிருப்போம்! இருப்பினும், அன்பானவர்களே, மிகுந்த கவனத்துடன் நடப்போமாக – நம்முடைய அடிகளில் கவனக்குறைவாக இருந்துவிட்டு, நமது தேவனுடைய இரக்கத்தினை அளவுக்கு அதிகமாக எதிர்பார்ப்பது என்பது ஒருக்காலும் இருக்கக்கூடாது. அதற்கு பதிலாக, ஊக்கமான ஜெபத்துடனும் விழிப்புடனும், "அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் நம்முடைய இரட்சிப்பு

நிறைவேறப் பிரயாசப்படுவோமாக''. அதேசமயம், நமது பிதாவும், "தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் நம்மில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்'' –பிலிப் 2:12,13.

"நடங்கள் கவனமாய் கிறிஸ்தவரே !
உங்கள் இரட்சகரை அழைக்க மறப்பீரானால்,
நீங்களும் அடிக்கடி விழுவீரே.
நீங்கள் ஜெப ஆயுதத்தைத் தரிப்பீர்களானால்,
சோதனை கண்ணி ஒவ்வொன்றினூடே பாதுகாப்பாய் நடந்திடுவீரே !

——————

**R 5492**

## "வாய்ப்புக்களுக்கு உண்மையாயிருத்தல்"

## FAITHFULNESS TO OPPORTUNITIES

**ஆதார வசனங்கள் : லூக்கா 19:11–27**

**திறவுகோல் வசனம் :** மத்தேயு 25:21 " எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமனும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்''.

நாம் ராத்தல் உவமையை, தாலந்துகள் உவமையோடு குழப்பிக்கொள்ளக்கூடாது. இவைகள் இரண்டும் முற்றிலும் வேறுபட்ட பாடங்களை கற்பிக்கின்றன. தாலந்துகள் உவமை விஷயத்தில், ஒவ்வொரு ஊழியக்காரருக்கும் கொடுக்கப்பட்ட எண்ணிக்கை வித்தியாசப்படுகிறது. ராத்தல் உவமையின் விஷயத்திலோ, ஒவ்வொரு ஊழியரும் ஒரு ராத்தலை சமமாகவே பெற்றனர். ஒரு ராத்தல் என்பது தோராயமாக, 16 டாலர்கள்(கிபி 1914 மதிப்பீட்டின்படி). ஆகவே இந்த உவமை, குறிப்பிடப்பட்ட வகுப்பார் அனைவருக்கும் பொதுவான ஒன்றைக் கையாள்கிறது. இவ்வுவமை கொடுக்கப்பட்டதன் நோக்கம் இப்பாடத்தில் கூறப்பட்டுள்ளது. கர்த்தரும் அவருடைய சீஷர்களும் எருசலேமை நெருங்கிக் கொண்டிருந்தனர். அங்கே அவர் கூடிய விரைவில் சிலுவையிலறையப்பட இருந்தார். சீஷர்களோ, அதற்கு முரண்பாடாக, மேசியாவின் ராஜ்யம் வல்லமையோடும், பெரிதான மேன்மையோடும் உடனடியாக ஸ்தாபிக்கப்படும் என்று யூகித்தனர். ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுமுன்பாக, ஒரு கணிசமான காலப்பகுதி கடந்துபோகும் என்று அவர்களுக்கு அறிவுறுத்தும் நோக்கில் இவ்வுவமை கூறப்பட்டது.

பாலஸ்தீனாவை ஆளுகை செய்த இராஜாக்கள், ரோமப் பேரரசரால் நியமிக்கப்பட்டு வந்ததை சீஷர்கள் அறிந்திருந்தனர். அவர்கள் இவ்வழியில் ஒரு அனுபவத்தை சமீபத்தில் அடைந்திருந்தனர். ஏரோதுகளில் ஒருவர், ரோமாபுரிக்குச் சென்று, ராஜ்யத்துக்கான நியமனத்தைக் கோரினார். அவரை வெறுத்த சிலர், ரோமாபுரிக்கு செய்தி அனுப்பி அவரை இழிவுபடுத்தி,மற்றொரு ராஜாவைத் தேர்வு செய்யும்படி தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தனர். இயேசு இந்த சூழ்நிலையை தனது சொந்தக் காரியத்திற்கான ஒரு உதாரணமாக எடுத்துக்கொண்டார். உலகிற்கான மேசியாவின் ராஜ்யத்துக்கு அவர் நியமிக்கப்பட்டவர். அவர் பரலோகத்துக்குச் சென்று, இப்பிரபஞ்சத்தின் பேரரசரும் மாபெரும் கர்த்தருமாகிய பரலோகப் பிதாவின் சமுகத்தில் காணப்படுவார். பிதாவினால் ஆளும் அதிகாரத்துக்கு பணியமர்த்தப்பட்ட பிறகு, பின்னாளில் பூமிக்கு திரும்பிவந்து, தம் ஆதிக்கத்தை செலுத்துவார்.

தீர்க்கதரிசனத்தில் இக்காரியம் நமக்கு விளக்கக்காட்சியாக கொடுக்கப்பட்டுள்ளது(சங்2:8). தெய்வீக ஒழுங்குமுறை என்னவெனில், மேசியா தம் பணியை நிறைவேற்றி முடித்தபிறகு, பரலோகத்திலிருந்து ராஜ்யத்துக்காக விண்ணப்பிப்பார், இதை தெய்வீக நியமம் முன்கூட்டியே ஏற்பாடுசெய்திருந்து, தெய்வீக தீர்க்கதரிசனம் இதைக்குறைத்து ஏற்கனவே முன்னுரைத்துவிட்டது; "என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்திரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்''– சங்2:8.

### நான் திரும்பி வரும்வரை இதைக்கொண்டு வியாபாரம் செய்

நம் ஆண்டவர் இல்லாதிருந்த இந்த இடைப்பட்ட காலத்தில் – பரலோகத்தில், பூமியின் இராஜ்ஜியத்துடன் தெய்வீக பணி அமர்த்துதலுக்காக காத்திருக்கும் காலத்தில்.. அவர் தம் சீஷர்களிடத்தில், தம் ஊழியக்காரர்களிடத்தில், வேறு வகையில் கூறுவோமாகில் தம் சகோதரர்களிடத்தில் சரிசமமாக ஒரு ராத்தல் கொடுத்தார். அவர்கள் தங்கள் சிறந்த நிதானிப்பை உபயோகித்து, அவருடைய ஊழியத்தில் அவர்கள் வைராக்கியத்தையும் அன்பையும் காண்பிக்கும்படி முழு சுயாதீனத்தைக் கொடுத்து, அவர்களை விட்டுச்சென்றார். அவர் திரும்பிவந்தபோது, இந்த ஊழியக்காரர்கள் அனைவரும் கணக்குப் பார்க்கப்பட்டு, ஊழியக்காரர்களாக அவர்களுடைய வைராக்கியம் மற்றும் திறனை எந்தளவு வெளிப்படுத்தியிருக்கின்றனர் என்பதன்

முடிவுகளைக்கொண்டு, அதற்கேற்ப வெகுமதிகள் அவர்களுக்கு அளிக்கப்படும்.

இவ்வுவமை, உடன்படிக்கை செய்துகொண்ட இந்த தேவனுடைய ஊழியக்காரரையும், பெரும் எண்ணிக்கையிலான ஜனங்களையும் வேறுபடுத்திக் காண்பிக்கிறது. பெருந்திரளான ஜனங்களிடத்தில் எதுவும் ஒப்படைக்கப்படவில்லை என்பதை இது காண்பிக்கிறது, இதனால் நம் ஆண்டவர் ராஜவாக திரும்பிவரும்போது, பெருந்திரளான ஜனங்களின் விஷயத்தில் எந்த நியாயத்தீர்ப்போ, வெகுமதியோ ஏற்படுத்தப்படாது. தம் ஊழியக்காரர்களிடத்தில் மட்டுமே அவர் ராத்தல்களை கொடுத்திருந்தார். அவருடைய ஊழியக்காரர்கள் மட்டுமே அந்த ராத்தல்களுக்கு பொறுப்பாளிகளாக இருந்தனர். இவ்விஷயத்தில் அந்த ஊழியர்கள் மட்டுமே வெகுமதிக்கோ அல்லது தண்டனைக்கோ பொறுப்பாளிகளாக எண்ணப்பட்டனர்.

இராத்தல் எதை அர்த்தப்படுத்துகிறது அல்லது எதை அடையாளப்படுத்துகிறது என்று கவனிக்கும்போது, ஒவ்வொருவருக்கும் சமஅளவே கொடுக்கப்பட்ட உண்மையை நாம் நினைவில் வைக்கவேண்டும். தேவனோடு அர்ப்பண உடன்படிக்கை செய்துகொண்ட அவரது ஊழியக்காரர்கள் எல்லாருக்கும் ஒரே அளவில், சில ஆசீர்வாதம் அல்லது பொறுப்பு ஒவ்வொரு விஷயத்திலும் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை, அதன் நிறைவேறுதல் வெளிப்படுத்தவேண்டும். கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்கும் துல்லியமாக ஒரே அளவு கொடுக்கப்பட்டது என்ற ஒரே காரியத்தை மட்டுமே நாம் சிந்திக்கமுடியும். அவர்கள் தாலந்துகளிலும் வாய்ப்புக்களிலும் ஒரே மாதிரியாக பெற்றிருக்கமாட்டார்கள். அதற்கு முரணாக மிகவும் வேறுபட்டிருப்பர். சிலர் அதிகமாகவும், சிலர் குறைவாகவும் செல்வம் உடையோராயிருப்பர்; சிலர் அதிகமாகவும் சிலர் குறைவாகவும் மனத்திறன் பெற்றிருப்பர்; சிலர் அதிகமாகவும் சிலர்குறைவாகவும் தயவுள்ள சூழ்நிலை அல்லது தயவற்ற சூழ்நிலையைப் பெற்றிருப்பர். இந்த வித்தியாசப்படும் தாலந்துகள் எதுவும் இந்த ராத்தல் உவமைக்கு சொந்தமானதல்ல.

ராத்தல் எல்லாருக்கும் சமமாகவே அளிக்கப்பட்டது, இது நீதிமானாக்கப்படுதலைக் குறிக்கிறது. தம் பின்னடியார்கள் அனைவருக்கும் இந்த ஒன்றைச் செய்து, மீட்பர் எல்லாக் காரியங்களிலிருந்தும் அவர்களை விடுவிக்கிறார். ஒவ்வொரு தனிநபரும் அவர் குறைவுபட்டிருப்பதன் அளவுக்கேற்ப, அதாவது தெய்வீகத் தரமாகிய பூரணத்திற்கு குறைவுபட்டுள்ள அவரது சுபாவத்தின் அளவுக்கேற்ப நீதிமானாக்கப்படுதல் கொடுக்கப்பபடுவதால், இது, அவர்கள் அனைவரையும் ஒரு சீரானநிலையில் நிறுத்துகிறது.

### நீ மரணபரியந்தம் உண்மையாயிரு

தற்போது தேவபிள்ளைகளாக, தேவ ஊழியர்களாக, கிறிஸ்துவின் பின்னடியார்களாக ஆன அனைவரும், கர்த்தருடனான உறவின் அடிப்படையாக, இருக்கிற அந்த ராத்தலை – பாவங்களிலிருந்து இலவச மன்னிப்பை, அதாவது நீதிமானாக்கப்படுதலை அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். இதன் அடிப்படையில், அவன் தேவனிடத்தில் ஒரு நிலைப்பாட்டை அடைகிறான். அவன் எதை செய்தாலும், அல்லது செய்ய முயற்சித்தாலும் அது அவனுக்கே உரியதாக இருக்கும். ஏனெனில் நீதிமானாக்கப்படுதலால் எல்லோரும் ஒரே தகுதியுடையவர்களாயிருப்பதால், ஒவ்வொரு ஊழியக்காரரையும் கட்டுப்படுத்துகின்ற அன்பின் வைராக்கிய அளவை, முடிவுகள் காண்பிக்கும். அதிகம் நேசிப்பவர்கள் அதிக ஊழியம் செய்வார்கள், குறைவாய் நேசிப்பவர்கள் தங்கள் வாய்ப்புக்களை உபயோகிப்பதில் அலட்சியங்காட்டுவர். இதை உவமையில், ஒருவர் 10 ராத்தல்களை ஆதாயப்படுத்தினவராக இருந்ததுபோல, அப்படிப்பட்ட குணதிசயமுடையோராக, பரிசுத்த பேதுரு, பரி. பவுல், பரி.யோவான் மற்றும் பிறர் உள்ளனர். இவர்கள் தெய்வீக ஊழியத்துக்கென மென்மேலும் தங்களை பலிசெலுத்தினர். வரவிருக்கிற ராஜாவை, தங்கள் குருவை பிரியப்படுத்தும் பொருட்டு, தங்களது வைராக்கியத்தில், பூமிக்குரிய எல்லாக் காரியங்களையும் நஷ்டமும் குப்பையுமாக எண்ணினர்.

இப்படிப்பட்டவர்கள், கர்த்தருடைய ஊழியத்தில் வைராக்கியத்தோடும், மகிழ்ச்சியோடும் தங்களை செலவழிக்கிறவர்கள் உயரிய வெகுமதிகளை அடையவிருக்கின்றனர். கர்த்தருடைய வார்த்தையில் குறிப்பிட்டபடி, “ நல்லது, உண்மையும் உத்தமமுள்ள ஊழியக்காரனே! நீ கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்தபடியால், பத்துப்பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு ”– லூக் 19:17. இந்த உவமையில் கூறப்பட்ட மற்றொரு ஊழியக்காரர் வந்து, “ஐந்து ராத்தல்களை ஆதாயமாக்கியதாக அறிவித்தான். முதலாவது நபர் செய்ததுபோல மிக நன்றாக செய்யாவிடினும், அவர் நன்றாக செய்திருந்தார், முதலாம் நபருக்கு கிடைத்த அதே பாராட்டை இவரும் பெற்றார். அவர் உண்மையுள்ளவராயிருந்தபோதிலும், முதலாம் நபரைக் காட்டிலும் குறைவாய் உண்மையுள்ளவராக இருந்தார். “நல்லது உத்தம ஊழியனே” என்று தன் எஜமானால் பாராட்டப்பட்டபோதிலும், “ஐந்து பட்டணங்களுக்கு

அதிகாரியாயிரு'' என்று குறைவான வெகுமதியை அடைந்தார். மேசியாவின் ராஜ்யத்தில் குறைவான செல்வாக்குடைய ஸ்தானமே கிடைக்கும் என்பதே இதன் பொருள்.

பின்பு வேறொரு ஊழியன் வந்து, ''ஆண்டவனே, இதோ, நீர் எனக்குக் கொடுத்த உம்முடைய ராத்தல், இதை ஒரு சீலையிலே வைத்திருந்தேன்'' என்றான். இது ''நான் என் நீதிமானாக்குதலை பாதுகாக்க பெருமுயற்சி செய்தேன், நீதியாகவும் கனத்தோடும் ஜீவிக்க பெருமுயற்சி செய்தேன், ஆனால் என்னை நான் பலிசெலுத்தவில்லை. நான் எதையும் இழக்கவில்லை என்று சொல்வதில் மகிழ்ச்சியடைகிறேன், என் வாய்ப்பையும் என் சிலாக்கியத்தையும் பயன்படுத்த உண்மையாகவே நான் பயந்தேன், ஏனெனில் நீர் எனக்குக் கொடுத்த தொகையிலிருந்து கணிசமான வருமானத்தை எதிர்பார்க்கிறீர் என்று நான் புரிந்துகொண்டேன்'' என்றுசொல்கிற ஒரு வகுப்பாரை குறிப்பிடுகிறது.

இவ்வுவமையில், எஜமான் இந்த நபரை இன்னும் ஊழியனாகவே குறிப்பிட்ட போதிலும், தீய ஊழியனே என்கிறார். அந்த ஊழியன் தன் எஜமானின் சித்தத்தை அறிந்திருந்தான், அவன் தன் ஊழியத்தை ஏற்றுக்கொண்டிருந்தபோதிலும், அதற்கு உண்மையற்றவனாகக் காணப்பட்டான். ஒரு ஊழியக்காரனாக தன்னை வெளிப்படுத்தாதிருந்தால் ராத்தலைப் பெறாதிருந்திருப்பார், அதற்கான பொறுப்பையும் அடையாதிருந்திருப்பார். அவர் தன் சிலாக்கியத்தையும் வாய்ப்பையும் உபயோகித்திருக்கவேண்டும். தன் எஜமானுக்காக அவர் ஜீவித்திருக்கவேண்டும், மற்றவர்களைப்போல் தீவிரமாக மற்றும் நேரடியாக செயல்படாவிடினும், தன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட ராத்தலை குறைந்தபட்சமாவது உபயோகித்திருக்கவேண்டும். இதனால் அவர் காண்பிக்க சில பலன்கள் இருந்திருக்கும்.

கணிசமான எண்ணிக்கையுள்ள வகுப்பாரை இந்த நபர் குறிக்கிறார் என்று நம்மால் யூகிக்கமுடிகிறது. கர்த்தரிடத்தில் அவரது ஊழியர்களாக உடன்படிக்கைக்குள் நுழைந்து, அவரது கரங்களிலிருந்து நீதிமானாகுதலைப் பெற்றுக்கொண்ட இவர்கள், அவரது ஊழியத்தில் சுயத்தை பலிசெலுத்த தங்களை ஈடுபடுத்துவதற்கு இணங்குவதை புறக்கணித்தவர்கள். அன்பின் வைராக்கியத்தில் குறைவுபட்டதையே இவர்களது புறக்கணிப்பானது சுட்டிக்காட்டுகிறது; இவர்கள் ராஜ்யத்தில் பங்குபெற தகுதியற்றவர்கள் என்பதையே இவைகள் குறிப்பிடுகின்றன. கர்த்தரால் இந்த வகுப்பார் பல தருணங்களில் குறிப்பிடப்படுகின்றனர். உதாரணமாக, திருமணத்திற்குள் நுழைவதில் தோல்வியுற்ற புத்தியில்லாத கன்னியரை இவர்கள் குறிக்கின்றனர். ஆகவே இவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகிய மணவாட்டியின் அங்கங்களாக தவறுகிறார்கள்.

### அக்கினியால் காக்கப்பட்டோர்

பரிசுத்த பவுல், இதே வகுப்பாரை சித்திரமாக காண்பித்து, இந்த யுக முடிவில் அதே பரீட்சையிலுள்ள சபையாரை அவர்களோடு தொடர்புபடுத்துகிறார்; ''அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும், நாளானது அதை விளங்கப் பண்ணும், ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும். அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்''– 1கொரிந்3:13. அவர் தொடர்ந்து கூறுகிறார்; பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்களால் கட்டுபவர்கள், எந்த இழப்பினாலும் துன்புறுவதில்லை, அவர்கள் முழு வெகுமதியை அடைவார்கள்; ஆனால் மற்றவர்களோ, விசுவாசத்தினாலுண்டான அதே நீதிமானாகுதலைப் பெற்று, அதே கன்மலையாகிய கிறிஸ்துஇயேசுவின்மீது கட்டினாலும், தங்கள் நேரங்கள் மற்றும் வாய்ப்புக்கள் அனைத்தையும் இழந்து துன்புறுவார்கள். ஆயினும் அவர்களோ இரட்சிக்கப்படுவார்கள். அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும் என்று கூட்டிச் சொல்கிறார்.

இந்த ஊழியர் வகுப்பார், தங்கள் நீதிமானாக்கப்படுதலை காத்துக்கொண்டு, பாதிப்புக்குட்படாமலும், கண்ணியமாயும் வாழ முற்பட்டு, தங்கள் உடன்படிக்கையின்படி செலுத்தவேண்டிய பலியில் தவறுகிறவர்கள், மிக மோசமான அர்த்தத்தில் இழக்கமாட்டார்கள் என்று பொருள்படுத்துவதாக நாம் புரிந்துகொள்கிறோம். இவர்கள் மெய்யாகவே மாபெரும் பரிசை, ராஜ்யத்தின் உயரிய ஆசீரை இழந்தாலும், தொடர்ந்து ஊழியர்களாக இருந்து நீதியை நேசிக்கிறபடியாலும், அக்கினியினால் –அதாவது உபத்திரவங்களின் மூலமாக இரட்சிக்கப்படுவார்கள். இவர்கள் ஆவிக்குரிய மட்டத்தில் நித்திய ஜீவனை இறுதியில் ஆதாயப்படுத்தினாலும் மணவாட்டி வகுப்பாரைக் காட்டிலும் தாழ்வான நிலையைப் பெறுவார்கள். வேதாகமத்தில் இவர்கள் கன்னிகைகளாக குறிப்பிடப்பட்டிருந்து, மணவாட்டியைப் பின்தொடரும் தோழிகளாயிருப்பர் என தோற்றமளிக்கிறது – சங்45:14.

வெளிப்படுத்தின விசேஷத்தில் அதிகாரம் 7 மற்றும் 14இல் இவைகள் மீண்டும் சித்தரிக்கப்பட்டுள்ளன. இதில் தெரிந்தெடுக்கப்பட்ட சபை 1,44,000 என்றும், ஆட்டுக்குட்டியானவர் எங்கு சென்றாலும் அவரைப்

பின்பற்றினதால் இவர்கள் சீயோன் மலைமீது நிற்பார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்பு திரளான கூட்டத்தார் தங்கள் ஆடைகளை தூய்மைப்படுத்திக்கொண்டு மகா உபத்திரவத்திலிருந்து வருவார்கள் என்றும், சிங்காசனத்தின்மீது உட்காருவதற்கு பதிலாக, சிங்காசனத்தின் முன்பாக நிற்கும் ஒரு ஸ்தானத்தை அடைவார்கள் என்றும் சித்தரிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு கிரீடத்துக்கு பதிலாக குருத்தோலைகள் அளிக்கப்படும். ஜெயங்கொண்டவர்களாக இவர்கள் இருந்தாலும், முற்றிலும் ஜெயங்கொண்டோரல்ல. இந்த வகையில், இவர்கள் தேவனுடைய நேசகுமாரனின் முழுமையான சாயலை பிரதிபெடுக்கவில்லை, இவ்வுவமையில் அமைக்கப்பட்டுள்ளபடி, அவரோடுகூட அவரது ராஜ்யத்தின் ஊழியங்களுக்கும் மகிமைகளுக்கும் மேன்மைகளுக்கும், அவரோடு பங்குபெறுகிற அவருடைய மணவாட்டி வகுப்பின் அங்கங்களாவதற்கு தகுதியுடையவர்களாக மதிக்கப்படுவதில்லை..

''..உமக்கு பயந்திருந்தேன்'' என்பதே, ராத்தலை வைத்திருந்த ஊழியக்காரனால் வெளிப்படுத்தப்பட்ட பயமாயிருந்தது என்பது, இந்த வகுப்பாரைக்குறித்து அப்போஸ்தலருடைய வார்த்தைகளை நமக்கு நினைவூட்டுகின்றன. மரண பயத்தினால் தங்கள் ஜீவிய காலமெல்லாம் அடிமைத்தனத்துக்குட்பட்டிருந்தவர்களை கிறிஸ்து தம் இரண்டாம் வருகையில் விடுவிப்பார் என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்களின் அர்ப்பணிப்பானது மரணபரியந்தமானது, மரணத்துக்குப் பயப்படுகிறவர்களோ தங்கள் உடன்படிக்கையின் பொருத்தனையை நிறைவேற்ற பயப்படுகிறார்கள். இவர்கள் உண்மையுள்ள ஊழியக்காரர்களென்று கர்த்தரால் அங்கீகரிக்கப்பட பாத்திரர்களல்லர். இருந்தபோதிலும் ராஜாவின் வீட்டில் அதிக கனத்திற்குரிய சில பாத்திரங்களும், குறைவான கனத்திற்குரிய சில பாத்திரங்களுமாக,அநேக பாத்திரங்கள் உண்டு – 2தீமோத் 2:20,21.

### ''என்னுடைய சத்துருக்கள்''

கர்த்தர் இரண்டாம் வருகையில் வந்திருந்து, முதலாவதாக, தம் சொந்த ஊழியக்காரர்களிடத்தில் தம் செயல்தொடர்பை முடிக்கும்வரை, உலகத்தோடும் , விசேஷித்தவிதமாக தம் எதிரிகளோடும் மகிமையின் ராஜாவாக தம் செயல்தொடர்பை துவங்குவதில்லை. உவமையின் அறிக்கை இதுவாயிருந்து, அது பல வேதவசனங்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முந்தைய இரவில் இயேசு ஜெபித்ததாவது; ''..''நான் உலகத்துக்காக வேண்டிக் கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்... இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்கிறேன்''(யோவான் 17:9,20). இவ்வாறு நம் கர்த்தரால் சுவிசேஷ யுகத்தின் பணியானது கோடிட்டுக் காண்பிக்கப்பட்டுள்ளது. இது தம் ஊழியர்களை பரிசோதித்து அவர்கள் தங்களை நிரூபித்து தெரிந்தெடுக்க மட்டுமேயாகும். தேவன் ஆணையிட்டவாறு மாபெரும் ஆயிரவருட ராஜ்யத்தில் கிறிஸ்துவோடுகூட ஐக்கியப்பட யார் தகுதியுள்ளோராக காணப்படுகின்றனர் என்று தீர்மானிக்கும் நோக்கம் கொண்டதாக இது உள்ளது. இவர்களுடைய பணியானது முழு உலக மனுக்குலத்தையும் உயர்த்தி ஆசீர்வதிப்பதாக இருக்கும்.

மீட்பர் தம் இரண்டாம் வருகையின்போது, தம் சபையை முதலாவதாக கூட்டி சேர்த்து மகிமைப்படுத்தி, தம் ராஜ்யத்தை ஸ்தாபிக்கத் தயாராகும்வரை, உலகிற்காக விண்ணப்பிக்கவோ, ஜெபிக்கவோ மாட்டார் என்று இரண்டாம் சங்கீதம் சுட்டிக்காட்டுகிறது. பின்பு புறஜாதியாருக்காக அவர் விண்ணப்பம் செய்வார். புறஜாதியார் என்ற வார்த்தையானது, ''தீய கிரியையினால் பகைவராயுள்ள'' தேவனிடத்தில் ஐக்கியமில்லாதிருக்கிற அனைவரையும் குறிப்பிடுகிறது. மேசியா புயஜாதியாரிடத்தில் கண்டிப்புடன் நடந்துகொள்வார் என்று சங்கீதம் தொடர்ந்துகூறுகிறது. ''..குயக்கலத்தைப்போல் அவர்களை உடைத்துப்போடுவீர்''. மற்ற வேத வசனங்கள் விளக்குகிறபடி, மேசியாவின் ராஜ்யத் துவக்கமானது,மகா உபத்திரவக்காலத்தைக் கொண்டுவரும் என்று பொருள்படுத்துகிறது. இதை அக்கினி அல்லது அக்கினியாலான நியாயத்தீர்ப்புகள் என உருவகபாஷையில் கூறப்படுகிறது. ''அவர் பழிவாங்குகிற அக்கினி ஜூவாலையாக வெளிப்படுவார்''. நீதியின் தெய்வீக நிலைப்பாடுகளுக்கு எதிராக உள்ள தற்கால அமைப்புக்கள் தொடர்பான அனைத்தும் கடுமையாக அசைக்கப்பட்டு, முடிவில் அழிக்கப்படும்.

ஆயினும் குணமடையும்படி கர்த்தர் காயப்படுத்துகிறார். உபத்திரவக் காலத்தின் பாடங்கள் நல்வாழ்வு அளிக்கும். ''கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள் பூமியில் நடக்கும்போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்'' என்று நாம் வாசிக்கிறோம். இந்த நியாயத்தீர்ப்புகள் எவ்வகையிலும் மேசியாவின் ராஜ்யத்தின் ஆயிரவருட ஆளுகை முழுவதும் தொடர்ந்து நடைபெறாமல், அதற்கு தகுதியுடையவர்கள்மீது மட்டுமே சுமத்தப்படும். குறிப்பாக, நியாயத்தீர்ப்புகள் துவக்கத்தில்

கடுமையாயிருக்கும். நீதியைக் கற்கும் அனைவரும் அதினால் தங்களை விடுவித்துக்கொள்வார்கள். ராஜாதிராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமானவரிடத்தில் அவர்கள் இணக்கத்துக்கு வருவதால், ஆசீர்வாதங்கள் அவர்களது பங்காகும், அவர்கள் படிப்படியாக தங்களை உயர்த்தி, மனித பூரணத்தை அடைவார்கள்.

### "எனக்குமுன்பாக வெட்டிப்போடுங்கள்"

மகிமையின் ராஜா தம் விரோதிகளிடத்தில் மன்னிப்பளிக்காதவரும், மூர்க்கமானவரும், இரக்கமற்றவருமாயிருப்பார் என்று இவ்வார்த்தைகள் குறிப்பிடுவதாக, முதலில் நாம் எண்ணக்கூடும். இவ்வார்த்தை எப்படி இரங்கும் தன்மையை காண்பிக்கமுடியும் என நாம் ஆச்சரியப்படக்கூடும்! நம் விரோதிகளை நேசிக்கவும், நம்மை கேவலமாய் பயன்படுத்துவோர்க்கு நன்மை செய்யுங்கள் என்று அவர் நமக்கு புத்திமதி கூறியிருக்கிறாரே! இதுவே மாபெரும் ராஜா கடைப்பிடிக்கும் கொள்கையாக இருக்கும் என்று நாம் படிப்படியாக கண்டுகொள்வோம். தம் விரோதிகளின் தவறான போக்கினால் அவர் அவர்கள்மீது அவமானம், பகிரங்கப்படுத்துதல், அவமதிப்பு போன்ற தண்டனைகளை வருவிப்பதன்மூலம், அவர்களுக்கு பெரிதான நன்மையை அவர் செய்கிறார். தங்களது உண்மை நிலையை மதிப்பிட்டு அவர்களை எழுப்புவதற்கும், அவர்களது சிலாக்கியங்களை காண்பிப்பதற்கும் இப்படிப்பட்ட காரியங்கள் அவசியமாகின்றன.

இந்த யுகத்தின்போது தம் உண்மையுள்ள ஊழியக்காரர்களுடனான கர்த்தரின் செயல்தொடர்புகள், அவர்கள்மீது அக்கினி போன்ற சோதனைகளை அனுமதித்து அவர்களை பரிசோதிப்பதும், அவர்களுக்கு அறிவுறுத்துவதுமாக இருந்துவருவதை நாம் மறக்கக்கூடாது. உலகின்மீது அக்கினிபோன்ற நியாயத்தீர்ப்புக்களை வரவிடும் நம் ஆண்டவரின் வடிவமைப்பைக் கண்டு நாம் ஆச்சரியப்படக்கூடாது. அவை உலகின் காயத்துக்காக அல்ல, அதன் ஆசீர்வாதங்களுக்காகவே. பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த பேதுரு பிரசிங்கித்ததன் பலனாக, அவரது செய்தியைக் கேட்டவர்களின் இருதயங்களில் சத்தியங்கள் பாதிப்புண்டாக்கின. "இதை அவர்கள் கேட்டபொழுது இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி..."(அப்2:37) . ஆனால் இது ஒரு மாபெரும் ஆசீர்வாதமாக இருந்தது என நாம் உணர்கிறோம். இதன்மூலம் தெய்வீக இரக்கத்தின் செய்திக்கு அவர்களை ஆயத்தம் பண்ணிற்று. இங்கு தம் எதிரிகளை வெட்டிப்போடும் கர்த்தரது செய்கையை நாம் வாசிக்கிறோம். அவர்கள் இருதயத்தில் குத்தப்படுவார்கள். வெளிப்படுத்தின விசேஷத்தில் இந்த வெட்டப்படுதலைக் குறித்த காட்சி நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அங்கு, கர்த்தர் மகிமையும் மாட்சியுமுடையவராய் குறிப்பிடப்பட்டு, புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது(வெளிப்19:15) என்று உள்ளது. ஆசீர்வதிக்கப்பட்ட அடித்தல்! இது எவ்வளவு சீக்கிரம் துவங்குகிறதோ, அவ்வளவுக்கு உலகத்திற்கு நல்லது என்று நம்மால் கூறமுடியும். ஆயினும் எல்லாவற்றிற்கும், தேவன் வைத்திருக்கின்ற காலமே சிறந்தது என்பதை நாம் நினைவில் கொள்கிறோம்.

மேசியாவின் இராஜ்யத்தின் வளர்ச்சி பற்றிய இதே போன்ற மற்றொரு சித்திரம், உருவக பாஷையில் கொடுக்கப்பட்டுள்ளது: அது, "சவுரியவானே, உமது மகிமையும் உமது மகத்துவமுமாகிய உம்முடைய பட்டயத்தை நீர் உம்முடைய அரையிலே கட்டிக்கொண்டு, சத்தியத்தினிமித்தமும், நீதியுடன்கூடிய சாந்தத்தினிமித்தமும், உமது மகத்துவத்திலே ஜெயமாக ஏறிவாரும். உமது வலதுகரம் பயங்கரமானவைகளை உமக்கு விளங்கப்பண்ணும். உம்முடைய அம்புகள் கூர்மையானவைகள்; அவைகள் ராஜாவுடைய சத்துருக்களின் இருதயத்திற்குள் பாயும்; ஜனசதளங்கள் உமக்குக் கீழே விழுவார்கள்" –சங் 45:3–5.

இங்கு மேசியாவின் ராஜ்யம் வல்லமையோடும் உயர்ந்த மகிமையோடும், மாட்சிமையோடும் ஸ்தாபிக்கப்படுவதை சித்திர உருவமாக காண்பிக்கப்பட்டுள்ளது. தெய்வீக சத்தியத்தின் கூர்மையான அம்புகள், பெருந்திரளான பிழையை அழிப்பதாக குறிப்பிடப்படுகிறது. பெரிதான ஆசீர்வாதத்தை இந்த பேரழிவு குறிப்பிடுகிறது. குணப்படுத்தவே கர்த்தர் அடிக்கிறார். அவருடைய வார்த்தை இருதயத்தைக் குத்தும்போது, அதன்விளைவு எதிராளி அழிக்கப்படுவதாகும். கர்த்தருடைய பகைவர்கள் இவ்வாறு அவருக்குக் கீழ்ப்படுத்தப்படாவிடில், இறுதி அழிவைத்தவிர வேறு எதுவும் மீந்திருக்காது என்று பரிசுத்த பேதுரு குறிப்பிடுகிறார்; "அந்த தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்"–அப்3:23.

--------

R 5493

# முன்மாதிரிகையின் முக்கியத்துவம்

## THE IMPORTANCE OF EXAMPLE

“உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு” – 1தீமோத்தேயு4:12.

தீமோத்தேயு வயதில் இளையவராயிருந்தாலும், சபையில் ஒரு மூப்பராக இருந்தார் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். ஆகவே அவர் விசுவாசிகளுக்கும், சபை முழுமைக்கும் மாதிரிகையாக இருக்கவேண்டும் என்று, பரிசுத்த பவுல் அவரது சிந்தையில் பதிய வைப்பது பொருத்தமாயிருந்தது. இப்படிப்பட்ட அறிவுரை நிருபத்தின் மற்ற இடங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அப்போஸ்தலர், நம் திறவுகோல் வசனத்தில் விசுவாசிகளுக்கு முன்மாதிரியாயிரு என்று கூறாமல், விசுவாசம் உடையவர்கள் எப்படி வாழவேண்டும் என்பதற்கு முன்மாதிரியாயிரு என்றார். இக்கருத்து எவ்வளவு வித்தியாசப்படுகிறது!

விசுவாசிகளின் முன்மாதிரியாயிருத்தல் என்பது, விசுவாசிகள் எதற்காக நிற்கிறார்கள், அவர்கள் எதை விசுவாசிக்கிறார்கள், அவர்கள் எதை போதிக்கிறார்கள், எப்படி அவர்கள் ஜீவிக்கிறார்கள் என்று சுவிசேஷத்தில் உள்ள தன் உடன்வேலையாட்களுக்கு காண்பிப்பது மட்டுமல்லாமல், குறிப்பாக உலக ஜனங்களுக்கு முன்பாக ஒருவர் வெளிப்படுத்துவதை அர்த்தப்படுத்துகிறது. நாம் சத்திய செய்தியைப் பிரகடனப்படுத்தும்போது, நம் வார்த்தையிலும், அதாவது, அப்போஸ்தலர் கட்டளையிடுகிறபடி, நம் மொழியின் குணத்திலும் அப்படிப்பட்ட மாதிரிகையை ஏற்படுத்துவதை நாம் காணவேண்டும். நாம் மென்மை நாவுடையோராகவும் உணர்ச்சி ஆர்வமிக்கவராயும் மட்டும் இராமலும், இரக்கமுள்ள வார்த்தைகளை பேசுவோராய் மட்டும் நில்லாமலும், கருணையுள்ளோராயும், வெளிப்படுத்தப்படும் ஆர்வம் உண்மையானதாயும், இருதயத்திலிருந்து வருவதாயும் இருக்கவேண்டும். இவ்வாறு கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரும் மாதிரிகைகளாக இருந்து, நம் ஆண்டவரின் துதியை வெளிப்படுத்த பாடுபடுவார்கள்.

“நீ நடக்கையிலும் முன்மாதிரியாயிரு” என்று பரிசுத்த பவுல் மேலும் வலியுறுத்துகிறார். நமது நடக்கை என்ற வார்த்தை, பேச்சை மட்டும் குறிப்பிடுவதில்லை, இந்த வார்த்தையின் உண்மையான அர்த்தம் நடத்தையாக இருக்கிறது. நம் நடத்தை, நம் பண்பையும், நாம் செயல்படும் விதத்தையும், நாம் நடக்கும் வழியையும், நம் பொதுவான ஒழுக்கத்தையும் சார்ந்திருக்கிறது. வெறுமனே வார்த்தைகளை மட்டும் சார்ந்ததல்ல. நம் பெருந்தன்மையான நடத்தையால் நாம் முன்மாதிரியாயிருக்கவேண்டும். நாம் கதவை மூடுபவர்களாகவோ, மூர்க்கத்தனமாகவோ, அருவருப்பானவர்களாகவோ, பிறரைக் குறித்த சிந்தையற்றவர்களாகவோ இருக்கக்கூடாது. நாம் முரட்டுத்தனமாக அல்ல, ஒவ்வொரு வழியிலும் தயாளமும் கருணையும் அக்கறையுமுள்ளோராக நடந்துகொள்ளவேண்டும்.

### உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கட்டும்

கிறிஸ்தவர்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு முன்மாதிரியாக, புதிய சுபாவத்திற்கென ஜெநிப்பிக்கப்பட்டவர்கள், தங்களை எல்லோருக்கும் வெளிப்படுத்த பிரயாசப்படவேண்டும். நாம் ஈடுபட்டிருக்கிற வேலையின் தன்மையானது நேர்மையாக இருக்கவேண்டும். அது தற்காலத்துக்குரியதாக இருந்தாலும், மனிதரைப் பிரியப்படுத்துபவர்கள் போலல்லாமல் கர்த்தருக்கு செய்வதுபோல, இருதயத்தில் ஒரே நோக்கமுடையவர்களாக, தேவ ஊழியக்காரர்களாக கவனமாகவும் உண்மையோடும் அது செய்யப்படவேண்டும். ஏனெனில் நாங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவுக்கே ஊழியம் செய்வோம்! கிறிஸ்தவனுடைய நடக்கையானது தியாக அன்பு என்ற பொருளில் இருக்கவேண்டும், பரிவிரக்கத்திலும், கருணையிலும், இரக்கமுள்ள வார்த்தையிலும் மற்றும் நடத்தையிலும் இருக்கவேண்டும். பொதுவான பரிவிரக்கமுள்ள ஆவி அவனுடைய வார்த்தையையும் செயல்களையும், அவனது முழு நடத்தையையும் நிரப்பவேண்டும். பரலோகத்தகப்பன் மனுக்குலத்தை நேசித்தார், அவர்கள் பாவிகளாயிருக்கும்போதே அந்த சந்ததியை நேசித்து, மனிதனது மீட்புக்காக தம் இருதயத்தின்மேலான பொக்கிஷமாயிருந்ததை கொடுத்தார். அவர் இன்னும் உலகத்தை நேசிக்கிறார், வருங்காலத்தில் உலகை ஆசீர்வதிப்போராக இருக்க, திருச்சபையை பொருந்தச் செய்துவருகிறார். ஆகவே கர்த்தருடைய ஆவியால் ஜெநிப்பிக்கப்பட்ட எவரும் தங்கள் ஜீவியத்தில் மறுரூபமாக்கும் செல்வாக்கைப் பெற்றிருக்கவேண்டும். தேவனுடைய வெளிச்சத்தால் இன்னும் ஆசீர்வதிக்கப்படாதோரிடத்திலும், வழிவிலகிச்

செல்வோரிடமும்கூட அந்த செல்வாக்கு தன்னில்தானே வெளிப்படும்.

“நீ ஆவியிலும் முன்மாதிரியாயிரு” என்று நம் திறவுகோல் வசனம் கூறுவதை வாசிக்கிறோம். “ஆவியிலும்” என்ற சொற்றொடர், வேதாகமத்தின் மூலப்பிரதிகளில் இடம்பெற்றிருக்கவில்லை. ஆயினும் இக்கருத்து முறையானதாக காணப்படுகிறது. நாம் எல்லோரிடமும் கருணையின் ஆவியை, மனப்பான்மையைக் காண்பிக்கவேண்டும். கர்த்தருடைய சிந்தையாகிய ஆவியே எல்லா நேரங்களிலும் நம்மை உயிர்ப்பிக்கும் ஆவியாக இருக்கவேண்டும்.

“விசுவாசத்திலும்” முன்மாதிரியாயிருக்கும்படி நமக்கு புத்திமதி கூறப்படுகிறது. அப்போஸ்தலருடைய புத்திமதி நம் எல்லோருக்கும் பொருந்தக்கூடியது. கிறிஸ்தவனுடைய விசுவாசம் அவனுடைய நடக்கையிலும், அவனுடைய வார்த்தையிலும், அவனுடைய வாழ்க்கை நடைமுறையிலும் பிறருக்கு வெளிப்படுத்தப்படுகிறது. அவன் முழு விசுவாசத்தோடு இருப்பானானால், தன் ஜீவியத்தில் அடைகிற அனுபவங்களுக்கு எதிராகவோ, கர்த்தருடைய ஏற்பாடுகளுக்கு எதிராகவோ அவன் முறுமுறுக்கமாட்டான். சர்வ வல்லவர் தமது குழந்தைகளாக நம்மை ஏற்றுக்கொண்டிருக்கிறார். நாம் அவரிடத்தில் தொடர்ச்சியான மற்றும் உறுதியான நம்பிக்கை உடையோராயிருக்கவேண்டும். யாரெல்லாம் உண்மை விசுவாசத்தை அடைந்திருக்கிறார்களோ அவர்கள் இந்த நம்பிக்கையை பெற்றிருக்கிறார்கள். தேவனிடத்தில் அற்ப விசுவாசமுடையோராக நம்மில் யாராவது காணப்படுவோமானால், பிறரிடத்தில் நம்மால் விசுவாசத்தை வெளிப்படுத்தமுடியாது, அல்லது அவர்களிடத்தில் விசுவாசத்தின் உத்வேகத்தை ஏற்படுத்தமுடியாது.

நாம் “தூய்மையிலும்” முன்மாதிரியாயிருக்கவேண்டும். தேவனோடும் அவருடைய வார்த்தையோடும் தொடர்புடைய எல்லாவற்றோடும், ஒரு உயர்ந்த தரத்தில் தூய்மை இணைந்து செல்கிறது. இது வேறெங்கும் காணப்படாதது. புறஜாதியாரின் தேசங்களில் ஜனங்கள் ஓரளவு தூய்மையான வாழ்க்கை வாழ்ந்தாலும், கிறிஸ்தவர்களிடையே உள்ள உயரிய தரம் வேறு எங்குமில்லை. அசுத்தமான அனைத்தும் தேவனுக்கு விரோதமானது. கிறிஸ்தவ குணாதிசயத்தில் பரிசுத்தம் அல்லது தூய்மை ஒரு ஆக்கக்கூறாக உள்ளது. நாம் முதலாவது சுத்தமுள்ளோராயும், பின்பு சமாதானமும், சாந்தமும் உள்ளோராயும் இருக்கவேண்டுமென்று, வேறு ஒரு தருணத்தில் அப்போஸ்தலனால் கூறப்பட்டது.

### வாசிக்கப்பட்டும் அறியப்பட்டுமிருக்கிற ஜீவனுள்ள நிருபங்கள்

தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும், இந்த வழிகள் அனைத்திலும், அவர்கள் எங்கு சென்றாலும் ஜீவனுள்ள பாடங்களாக, ஜீவனுள்ள நிருபங்களாக இருக்கவேண்டும். அவர்கள் உலகிற்கு முன்மாதிரிகைகளாக இருக்கவேண்டும். நாம் போதிப்பதை உலகம் நம்புகிறதோ இல்லையோ, இந்த இயல்புகளை நாம் வெளிப்படுத்தவேண்டும், அவர்களால் நம்ப முடியாவிட்டாலும் அங்கீகரிப்பார்கள், மதிப்பளிப்பார்கள். இந்த முன்மாதிரி, இப்போது இல்லாவிட்டாலும், ஏற்ற சமயத்தில் கனிதரும். தீமோத்தேயுவைப்போல ஒவ்வொரு மூப்பரும் அவருடைய நடத்தையில், வார்த்தைகளில் முன்மாதிரியில் குறிப்பாக கவனமாக இருக்கவேண்டும். சபை அப்படிப்பட்ட மூப்பரை தேர்ந்தெடுப்பதன்மூலம், இருதயத்தில் தேவனுடைய கிருபையின் கனிகளுக்கு ஒரு முன்மாதிரியாக அவர் இருப்பார் என்று அவர்கள் நம்புவதை வெளிப்படுத்துகிறது.

தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலருடைய ஆலோசனை என்னவெனில், “உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடி முன்மாதிரியாயிரு” என்பதாகும். இந்த ஆலோசனை தீமோத்தேயுவுக்கு மட்டுமல்ல, சபையில் மூப்பர்களாக இருக்கிற அனைத்து இளையவர்களும் கவனிக்கவேண்டியது. அவர்கள் மந்தைக்கு தங்கள் நடக்கைகளால் மாதிரிகைகளாக விளங்கவும், மேலும் சத்திய வசனத்தை சரியாய் பகுத்துப்பார்க்கும் ஆற்றலும், பிறரிடத்தில் நடந்துகொள்ளும் விதமும், அவர்கள் கொண்டுவருகிற செய்தியை குறைப்பதற்கோ அல்லது தேவனுடைய மந்தையை வழிநடத்த தகுதியற்றவர்கள் என்றோ, முதிர்ச்சியற்றவர்கள் என அவர்களைக் குறித்து எண்ணுவதற்கோ ஒருவனுக்கும் காரணம் இருக்காது.

ஆகவே வாலிபராகவும், வயோதிகராகவும் இருக்கிற தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் பின்பற்ற தகுதியான மாதிரிகைகளாக இருப்பதற்கு, தன் அன்றாட வாழ்வில் தன் ஆண்டவரின் சாயலை பிரதிபலிப்பதில் ஊக்கமுள்ள, உண்மையுள்ள மாதிரியாக இருப்பதற்கு பெருமுயற்சி செய்வார்களாக! நம் தேவனுடைய ஊழியத்தில் தீவிர வைராக்கியத்துக்கு சிறந்த மாதிரிகையாயும் இருப்பார்களாக. நாம் திரைக்கப்பால் அடையவிருக்கும் பரிசுத்த அழகுக்கும், இறுதி மகிமையின் முழு உணர்வுக்கும் மாதிரிகையாக இந்த மாம்ச சரீரத்தில் நம்மால் இருக்கமுடியாது. இந்த தற்கால வாழ்வில் இதை

நாம் எதிர்பார்க்கமுடியாது. நம் கர்த்தர் மட்டுமே அப்படிப்பட்ட மாதிரிகையாயிருக்கிறார்.

"நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்"(1கொரிந் 11:1) என்று அப்போஸ்தலர் பவுல் வலியுறுத்துகிறார். கிறிஸ்துவின் பரிபூரண சாயலை அடைவதற்கான தீவிரமுயற்சியின் உன்னதமான மாதிரிகையாக பரிசுத்த பவுல் இருந்தார். பவுல் அப்போஸ்தலனின் அன்பும், அவரது வைராக்கியமும், தன் குருவை பிரதியெடுக்க தீவிர ஊக்கத்தோடு போராடியதும், கிறிஸ்துவின் சித்தத்தை நிறைவேற்றியதும் நம் அனைவருக்குமான அகத்தூண்டுதலாய் இருக்கவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் தனித்தனியாக, தன் தனிப்பட்ட பொறுப்புணர்வை அடைவோமாக! "மலைமேல் கட்டப்பட்ட பட்டணமாக" நாம் இருப்போமாக! நான் "விசுவாசிகளின் முன்மாதிரிகையாய் இருக்கிறேனா?"என்ற கேள்வியை ஒவ்வொருவரும் நமக்கு நாமே கேட்போமாக!

---------

**R 5494**

## "கிறிஸ்துவின் வெற்றிப் பிரவேசம்"

## CHRIST'S TRIUMPHAL ENTRY

**ஆதார வசனங்கள் : மாற்கு 11 : 1–11**

**திறவுகோல் வசனம்** : சகரியா 9:9 " சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்".

"பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்பதே யோவான் ஸ்நானகர் பிரசங்கித்த செய்தியாக இருந்தது. இதே செய்தியைத்தான் பாலஸ்தீனம் முழுவதும் கிராமம் கிராமமாக எடுத்துச்செல்லுமாறு இயேசுவும் தமது சீஷர்களுக்கு கட்டளையிட்டார். இச்செய்தியே அவருடைய பிரசங்கத்தின் சுமையாகவும், அவருடைய உவமைகளின் கருப்பொருளாகவும் இருந்தது. இறுதியாக, அவருடைய ஊழியத்தின் முடிவில், யூத தேசத்திற்கு இராஜ்யம் வந்தது, அதாவது, அவர்களுக்கு அது அருளப்பட்டது என்ற அர்த்தத்தில் கூறப்பட்டது. அதனை ஏற்றுக்கொள்வதும் அவர்கள் கையில்தான் இருந்தது. இன்றைய பாடம் இராஜ்யத்தின் முறையான சலுகை இயேசுவால் வழங்கப்பட்டதையும், யூதர்கள் ஒரு ஜனங்களாக அதனை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்ததையும் கூறுகிறது. இவ்வாறு "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ(ஒருசிலரைத்தவிர) அவரை ஏற்றுக்கொள்ளவில்லை"(யோவான் 1:11). அவருடைய சொந்த தேசத்தாரே அவரை நிராகரித்து, ஐந்து நாட்களுக்குப்பிறகு அவரைச் சிலுவையில் அறைந்தனர். சிறிதுகாலம் கழித்து, பெந்தெகொஸ்தே நாளன்று, அவரை ஏற்றுக்கொண்ட சிலர் பரிசுத்தஆவியால் ஜெநிப்பிக்கப்பட்டதுமல்லாமல், அவருடைய இரண்டாம் வருகையின்போது நிறைவேற்றப்படவேண்டிய வேலைக்கும் , மகிமையான இராஜ்யத்திற்குமென்று ஆயத்தமாக்கப்பட்டு வருகிற ஆவிக்குரிய இஸ்ரயேலின் உட்கருவாக ஆனார்கள்.

இந்தப் பாடத்தின் நிகழ்வுக்கு முந்தின சாயங்காலத்தின்போது, இயேசுவும் அவருடைய சீஷர்களும் பெத்தானியாவில் இருந்த லாசரு மார்த்தாள் மரியாள் ஆகியோருடைய வீட்டிற்கு விருந்தினர்களாக சென்றனர். அங்கே அவர்கள் தாங்கள் மிகவும் அன்புகூர்ந்த இயேசுவுக்கு ஒரு விசேஷ விருந்து ஏற்பாடு செய்திருந்தனர். இந்த லாசருவையே அவர் சில நாட்களுக்கு முன்பு மரண நித்திரையிலிருந்து எழுப்பியிருந்தார். இந்த விருந்து யூத ஓய்வு நாளினுடைய முடிவின்போது நடந்தது. அடுத்த நாள் காலை வாரத்தின் முதல் நாளானது, நம்முடைய ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திருந்தது.

### இஸ்ரயேலருடைய நெருக்கடி அனுபவம்

தம்மை இராஜாவாக முன்னிலைப்படுத்துவதற்கான ஆயத்தத்தின்போது, இயேசு தம்முடைய சீஷர்களில் இருவரை அழைத்து, கழுதைக்குட்டியாகிய மறியைத் தம்மிடம் கொண்டுவருமாறு அனுப்பினார். மேலும் அதனை அவர்கள் எங்கே கண்டுபிடிக்கலாம் என்பதையும், எஜமானர் அதனைப் பயன்படுத்தியபிறகு திருப்பிக் கொடுத்துவிடுவார் என்று சொல்லுமாறும் அறிவுறுத்தினார். அந்த கழுதைக்குட்டி வருவதற்குள் இயேசுவையும், எந்த மனுஷன்மேல் அந்த குறிப்பிட்ட அற்புதம் நிகழ்த்தப்பட்டதோ அம்மனுஷனாகிய லாசருவையும் பார்க்க, பெத்தானியா கிராமத்தைச் சேர்ந்த ஜனங்களும், எருசலேமிலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவிலிருந்து வந்திருந்த மற்றவர்களுமென ஒரு கணிசமான கூட்டம் கூடியிருந்தது. இஸ்ரயேல் இராஜாக்கள் கழுதையின் மீதேறி தங்கள் முடிசூட்டு விழாவிற்குச் செல்வது நெடுங்கால வழக்கமாக இருந்தது. மேலும் திரளான கூட்டத்தினர் இந்த தருணத்தின் ஆவிக்குள் பிரவேசித்தவர்களாய், இயேசு இந்த கழுதைக்குட்டியின் மீதேறி எருசலேமுக்குள் பவனி வரப்போகிறார் என்பதன் அர்த்தம் என்ன என்பதை உணர்ந்தனர். இறுதியில் அவர் இராஜாவின் அலுவலை ஏற்க ஆயத்தமாக இருந்ததை இது குறிப்பிட்டது.

சில காலத்திற்கு சீஷர்கள் அவரை மேசியாவாக அடையாளங் கண்டிருந்தனர். அந்த மேசியாவினுடைய ஆளுகையின் மகிமைகளைத்தான் அவர்கள் பகிர்ந்துகொள்ள இருந்தனர். திரளான ஜனங்களோ, ''மேசியா வரும்போது இந்த மனிதனைப்பார்க்கிலும் மாபெரும் கிரியைகளைச் செய்வாரோ ?'' – அதாவது, இந்த மனிதனாகிய இயேசுவால் நிறைவேற்றப்படுவதைக் காட்டிலும், மேசியாவிடம் வேறெதுவும் அதிகமானதை எதிர்பார்க்கமுடியுமா ? என்று கூறி, அந்தளவிற்கு அவரை உயர்வாகக் கருதக் கற்றுக்கொண்டிருந்தனர். ஆனால் இயேசு தம்மை முறைசார்ந்தவகையில் முன்வைத்தது, இதுவே முதன்முறையாக இருந்தது. முந்தைய சந்தர்ப்பங்களில், அவர்கள் அவரை இராஜாவாக்க பலவந்தமாக அழைத்துச்செல்ல முயன்றபோது, நேரம் இன்னும் வரவில்லை என்பதை உணர்ந்த அவர், தம்மைத்தாமே விலக்கிக்கொண்டார். இப்போதோ, அவர் பின்வாங்காமல், செயல்படுத்துவதற்கு முன்வந்து, மறியைக் கொண்டுவர ஆள் அனுப்பி, தேசத்தின் தலைநகருக்கு அதின் இராஜாவாக வெற்றி பவனி செல்ல ஆயத்தமானார்.

தங்கள் எஜமானரின் மகிமை சமீபித்திருக்கிறதென்றும், அதில் தங்களுடைய பங்கைக் குறித்தும் நினைத்துப் பார்க்கையில், சீஷர்களின் இருதயங்கள் உற்சாகத்தால் எழுச்சியடைந்திருக்கும் என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். ஆயினும் அவர் சிலுவையில் அறையப்படவேண்டும், பின்னர் ''தூர தேசத்திற்கு'', அதாவது பரலோகத்திற்கே சென்று, அதிகாரமுடையவராக்கப்படவேண்டும், பின்னர் உலகத்தை ஆசீர்வதிக்கப்போகிற இராஜ்யத்தை ஸ்தாபிக்கத் திரும்பவேண்டும் என்கிற அவரது வார்த்தைகளின் முழு அர்த்தத்தையும் அப்போஸ்தலர்கள் இன்னும் உணராதவர்களாய் இருந்தனர்.

இருந்தபோதிலும், தம்மை இராஜாவாக முன்வைப்பதென்பது ஒரு முறையான காரியம் என்பதிலும், இஸ்ரயேல் தேசம் போக்குச்சொல்வதற்கு இடமில்லாமல் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதிலும் இயேசு முழு எச்சரிக்கையோடிருந்தார். அவர் நகரத்திற்குள் பிரவேசித்தபோது, ஜனங்கள் பெருமளவில் எழுந்து, அவரை அங்கீகரித்து, அவரைப் போற்றியிருந்தால், உண்மையில் அவர்கள் தெய்வீகத் தேவைகளுக்கு இசைவாக இருந்திருப்பார்கள். அது அவர்களுக்கு எல்லா ஆசீர்வாதங்களிலும் மேலானதை கொண்டுவந்திருக்கும். ஆனால் தாம் அசட்டை பண்ணப்படுவோம், மனுஷரால் புறக்கணிக்கப்படுவோம் என்றும், தம்முடைய சொந்த ஜனங்கள் வெட்கத்தால் தம்மிடமிருந்து தங்கள் முகங்களை மறைப்பார்கள் என்றும் தீர்க்கதரிசனம் ஏற்கனவே அறிவித்திருந்ததை இயேசு முன்னமே அறிந்திருந்தார்(ஏசாயா 53:3). ஆகையால் பயணமும் அதற்கான ஆயத்தமும், சீஷர்களுக்கும் திரளான ஜனங்களுக்கும் எதனை அர்த்தப்படுத்தியதோ, அதிலிருந்து மிகவும் வித்தியாசமானதாக இயேசுவுக்கு அவை அர்த்தப்படுத்தின.

### கல்லுகளே கூப்பிடும்

கழுதை கொண்டுவரப்பட்டதும், ஜனங்களில் சிலர் சேணத்திற்குப் பதிலாகத் தங்கள் வஸ்திரங்களை அதன்மேல் போட்டார்கள். இயேசு அதன்மீது ஏறினதும் பவனி தொடங்கியது. சிலர் அவருக்கு முன்சென்றார்கள், சிலர் பின்தொடர்ந்தனர். ''எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்'' என மேசியாவின் வருகையைக் குறித்து அறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசனத்தைக் குறித்து ஜனங்கள் நன்கு அறிந்திருந்தனர். தீர்க்கதரிசிகள் முன்னறிவித்திருந்த ''கெம்பீரி'' என்பது குறித்தும் மற்றும் அதற்கான எதிர்வினை பதில்கள் குறித்தும் அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். ஒரு தரப்பினர், ''தாவீதின் குமாரனுக்கு ஓசான்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்!'' என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். மீண்டும், ''கர்த்தரின் நாமத்தினாலே வருகிற நம்முடைய பிதாவாகிய தாவீதின் ராஜ்யம் ஆசீர்வதிக்கப்படுவதாக! என்கிற சத்தம் எழுந்தது. பின்னர் அதற்கு பதிலாக, ''உன்னதத்திலே ஓசன்னா!'' என்கிற கோஷம் எழுந்தது. இந்த வெவ்வேறு வாக்கியங்கள் வெவ்வேறு சுவிசேஷகர்களால் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

ஆனால் அனைவருமே இயேசுவை உற்சாகமாகப் போற்றுபவர்களாக இருக்கவில்லை. இசைந்துபோகாத சத்தமொன்று கேட்கப்பட்டது. ஆர்வத்தினிமித்தம் நகரத்திலிருந்து வந்தவர்களில் சிலர் ஆர்ப்பரிப்பைக் குறித்து குறைகூறினர். மேலும் தமக்கு இவ்வளவு பெரிய கனத்தைச் செலுத்திக் கொண்டிருப்பதற்காக ஜனங்களை இயேசு ஏன் கண்டிக்கவில்லை என்று ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் இயேசுவுக்கு அவருடைய சீஷர்கள் மூலமாய் இதைப்பற்றின செய்தியை அனுப்பினார்கள். அதற்கு இயேசு, ஒரு மாபெரும் தீர்க்கதரிசனம் நிறைவேறிக்கொண்டிருக்கிறது என பதிலளித்தார். பரிசுத்தஆவியின் ஏவுதலால் சகரியா தீர்க்கதரிசி, ''எருசலேம் குமாரத்தியே கெம்பீரி'' எனக் கூறினார்!. மேலும் அதுபோன்ற ஆர்ப்பரிப்பும் செய்யப்படவேண்டியிருந்தது. திரளான ஜனங்கள் சத்தமிடத் தவறியிருந்தாலும்கூட, தீர்க்கதரிசனம்

நிறைவேறியிருந்திருக்கும். கல்லுகளே கூப்பிட்டிருக்கும் என்று இயேசு அறிவித்தார்.

### முதலாம் குருத்தோலை ஞாயிறு

உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள சில கிறிஸ்தவர்கள், குறிப்பாக இயேசு எருசலேமுக்குள் பிரவேசித்த அந்த ஞாயிற்றுக்கிழமையை நினைவுகூருவது வழக்கம். அப்பவனியின்போது, ஜனங்களில் பலர் தங்கள் வஸ்திரங்களை மரியாதை மற்றும் கனத்தின் அடையாளமாக வழியிலே விரித்துவிட்டு, அச்சிறிய மிருகம் அவர்களைக் கடந்துசெல்லும்வரை காத்திருந்து, பின்னர் மீண்டும் முன் ஓடிச்சென்று, அவற்றை விரித்ததாக பதிவு சொல்கின்றது. மற்றவர்கள் இலைகளையும் பூக்களையும் புற்களையும் கொண்டுவந்து, வழியெங்கும் பரப்பினார்கள். இன்னும் சிலர் குருத்தோலைகளைக் கொண்டுவந்தார்கள் என பரிசுத்த யோவானுடைய சுவிசேஷம் நமக்கு கூறுகின்றது.

இது ஒரு மகிழ்ச்சியான ஊர்வலமாக இருந்து, சகரியாவின் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியது. ஆயினும், வேதாகமப் பதிவு சுட்டிக்காட்டுகிறபடி, இது இயேசுவுக்கு ஒரு சோகமான அம்சத்தை உள்ளடக்கியிருந்தது. எருசலேமைக் காணும்படியான ஒலிவ மலையின் திருப்பத்தை அவர்கள் அடைந்ததும், எஜமானர் பவனியை நிறுத்திவிட்டு, நகரத்தைப் பார்த்து அதற்காகக் கண்ணீர் விட்டழுது, “எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச்சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்; கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுங்காலம் (கிட்டத்தட்ட 19 நூற்றாண்டுகளுக்குப் பிறகு) வருமளவும் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” எனக் கூறினார்(லூக் 13:34,35).

அந்த நாள் யூத தேசத்திற்கு ஒரு திருப்புமுனையாக இருந்ததையும், அவர்கள் தம்மை நிராகரித்தது பரமபிதாவினால் அவர்கள் நீண்ட காலத்திற்கு நிராகரிக்கப்படுவார்கள் என்பதை அர்த்தப்படுத்தியதையும் இயேசு உணர்ந்திருந்தார். அதாவது, அவருடைய சீஷர்களாக மாறும் ஒருசிலரைத்தவிர, மற்றவர்கள் தெய்வீக தயவிலிருந்து விலக்கப்படுவார்கள் என்பதை அது அர்த்தப்படுத்தியது. அந்த நீண்ட நூற்றாண்டுகளில் ஆபிரகாமின் மாம்சீக சந்ததியின் மேலான தயவுபெற்ற ஜனங்கள் துயரத்தில் இருப்பார்கள் என்பதை அர்த்தப்படுத்தியது. பல நூற்றாண்டுகளாக அவர்களுடன் இருந்த தேவ தயவு இனிமேல் புறஜாதிகளுக்கு விரிவுபடுத்தப்படும், அதனால் புறஜாதிகளிடமிருந்து உண்மையுள்ள பரிசுத்தவான்களின் கூட்டமொன்று, பரலோக இராஜ்யத்தில் இயேசுவுடனும் மற்றும் உண்மையுள்ள யூதர்களுடனும் கூட்டாளிகளாகவும் உடன்சுதந்திரர்களாகவும் இருப்பதற்கென கூட்டி சேர்க்கப்படும் என்பதை அர்த்தப்படுத்தியது. இந்த தெரிந்துகொள்ளப்பட்ட பரலோக, ஆவிக்குரிய இராஜ்ய வகுப்பார் மகிமையடையும் வரையிலும், யூத ஜனங்கள் மீண்டும் தேவனுடன் ஐக்கியத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள் என்பதை அர்த்தப்படுத்தியது.

இஸ்ரயேலின் நிராகரிப்பு நிரந்தரமானது அல்ல, மாறாக ஒரு காலத்திற்கு மட்டுமே, உண்மையுள்ள பரிசுத்தவான்களின் முழு எண்ணிக்கையும் புறஜாதியார் மத்தியிலிருந்து கூட்டிச்சேர்க்கப்படும் வரை மட்டுமே என்கிற இந்த உண்மைக்குப் பரிசுத்த பவுல் குறிப்பிடத்தக்க வகையில் நம் கவனத்தை ஈர்க்கிறார். பின்னர் தேவனுடைய தயவானது மாம்சீக இஸ்ரயேலுக்குத் திரும்பும். அவர்களைத் தொடர்ந்து அது பூமியிலுள்ள எல்லா குடும்பங்களுக்கும் சென்று சேரும் – ரோமர் 11:25–32.

### சமாதானப் பிரபுவாகிய இயேசு

சமாதானப்பிரபுவாகிய இயேசுவின் இந்தப் பிரவேசம், பூமிக்குரிய வெற்றிவேந்தர்கள் மற்றும் இராஜாக்களின் வெற்றிப் பிரவேசங்களிலிருந்து எவ்வளவு வித்தியாசமானதாய் இருந்தது! மனித பேரார்வத்தின் உற்சாகத்திலும், மனித மனங்களின் தவறான அபிப்பிராயத்திலும், ஒரு விசேஷித்த மகிமையின் ஒளிவட்டம் உலகத்தை வென்றவர்களைச் சூழ்ந்திருக்கிறது. வீரச் செயல்கள், துணிவுமிகு வெற்றிகளென வரலாற்றாசிரியர்களால் சித்தரிக்கப்பட்டவைகளில் ஒரு வசீகரம் இருக்கிறது. மாவீரன் அலெக்ஸாண்டர், கிரேக்க ஸ்பார்டனியர், உரோம ராயர்கள் ஆகியோரின் வீரதீரம் குறித்தும், இன்னுமாக நவீன காலத்திய ராபர்ட் புரூஸ், நெப்போலியன் மற்றும் வெலிங்டன், அதிபதிகளாகிய கிராண்ட் மற்றும் லீ, ஷெர்மன், ஜான்சன், ஷெரிடன் மற்றும் ஸ்டீவர்ட் ஆகியோரின் வீரதீரம் குறித்தும் வளர்ந்து வரும் தலைமுறையினர் ஆர்வத்துடன் வாசிக்கின்றனர். இவர்கள் அனைவருடைய வீடு–திரும்புதலும் வெற்றி ஊர்வலங்களாக இருந்தன. பல சமயங்களில் யாருக்கு மரியாதை கொடுக்கப்பட வேண்டுமோ அவர்களுக்கு மரியாதை அளிக்கும் விதமாக இருந்தன.

ஆயினும்கூட, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அத்தகைய வெற்றிகளுக்கு வழிவகுத்த காட்சிகளுக்கு எதிராக, மனதின் கண்ணானது தவிர்க்க முடியாதவகையில் மூடிக்கொள்கிறது. கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த பத்து லட்சத்துக்கும் மேற்பட்டவர்களையும், துக்கத்தில் இருக்கும் பத்து லட்சத்துக்கு மேற்பட்ட விதவைகள் மற்றும் அநாதைகளையும் மறக்க முயற்சிக்கிறோம். அந்த வெற்றிகரமான படைகளுக்குப் பின்னால் புகைந்து கொண்டிருந்த வீடுகளின் இடிபாடுகளை நாம் மறக்க முயற்சிக்கிறோம். ஆயினும் நீதியை நிலைநாட்டுவதற்கு சில சமயங்களில் போர் அவசியமானதாகத் தோன்றினாலும், பட்டயத்தால் வாங்கப்பட்ட ஆசீர்வாதங்கள் பயங்கரமான விலைகொடுத்து சேகரிக்கப்பட்டவை என்பதை நாம் அனைவரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

இந்தக் கண்ணோட்டத்தில், சமாதானப்பிரபுவாகிய இயேசுவும், அவரைத் தொடர்ந்து அவரது அடிச்சுவடுகளில் நடந்துவரும் பரிசுத்தவான்களின் சேனையும்– உலக ஜனங்களுக்கும் கூட ஓர் அழகான சித்திரத்தை வழங்குகின்றனர். தலைவரும் பின்னடியார்களுமாகிய இந்த வெற்றியாளர்கள் – மரிப்பதன்மூலம் ஜெயம் பெறுகிறார்கள். எனவேதான் இயேசுவும் தம்மைப் பின்பற்றியவர்களிடம், "தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தி–னிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான்"(மத்16:25) என்று கூறினார். இவ்வாறு கண்ணோக்குகையில், ஆட்டுக்குட்டியானவரின் பின்னடியார்கள் அனைவரும் சுயத்தைப் பலிசெலுத்துபவர்களாய் இருக்கிறார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. "...சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை"(ரோமர் 12:1). மரணத்தின் மூலம் கிடைக்கும் இப்படிப்பட்ட வெற்றியை, பெரும்பாலான ஜனங்களால் புரிந்துகொள்வது கடினம்! இதன் தத்துவம் என்ன ? வெற்றி எங்கே ? என புரிந்துகொள்வது கடினம்.

## மரிப்பதன் மூலம் வெற்றிபெற்ற இராஜாக்கள்

சகோதரர்களுக்காகத் தங்கள் ஜீவனைக் கொடுப்பதிலும், சத்தியம் மற்றும் நீதிக்கு ஆதரவளிப்பதிலும், கிறிஸ்து மற்றும் அவருடைய பின்னடியார்களுடைய வெற்றி எங்கே உள்ளது என்று கேட்கக்கூடும். வேதாகமம் மாத்திரமே இக்கேள்விக்கு பதிலளிக்கிறது. விசுவாசத்தைக் கடைப்பிடிப்பவர்களால் மாத்திரமே வேதாகமத்தின் பதிலைப் புரிந்துகொள்ள முடியும். கிறிஸ்து மற்றும் திருச்சபையின் உண்மையான வெற்றி என்பது சுயத்தின் மீதான வெற்றியாக இருக்கிறதென்றே வேதாகமம் அறிவிக்கின்றது. அவர்களின் முடிசூடும் நாள் எதிர்காலத்திற்குரியது. அவர்களது வெற்றியினால் உண்டாகும் சந்தோஷம் அப்போதுதான் இருக்கும்.

கழுதையின் மீதேறிச் சென்ற இயேசுவின் வெற்றிப்பிரவேசம் நிழலாக மாத்திரமே இருந்தது. நிஜமானது திரைக்கு அப்பால் மகிமைவாய்ந்ததாக இருக்கும். எவ்வாறு இயேசு தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு மகிமையைப் பெற்றுக்கொண்டாரோ, அதுபோலவே, சபையின் உயிர்த்தெழுதலானது அவர்களை அபூரண மனிதர்களிலிருந்து பரிபூரண ஆவிக்குரிய ஜீவிகளாக. உலகத்தை ஆசீர்வதிக்கவிருக்கும் மகிமையான ஆயிரமாண்டு இராஜ்யத்தில் தங்கள் மீட்பராகிய எஜமானருடன் உடன் சுதந்திரவாளிகளாக மாற்றும் என்று அவர் தம் சபைக்கு வாக்களித்திருக்கிறார்.

இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தபிறகு, தம்முடைய மரணம் எதனை அடையாளப்படுத்துகிறது என்று மனக்கலக்கமடைந்திருந்த சீஷர்களுக்கு, "கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும்(மரணம்), தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா ?"(லூக்கா 24:26) என விளக்கினார். எனவே இராஜ்யத்தில் இயேசுவின் பங்காளிகளாக ஆகப்போகின்ற எல்லோரைக்குறித்தும், பரிசுத்த பவுல் பின்வருமாறு அறிவித்தார்; அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தார்களானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வார்கள்; அவரோடேகூட மரித்தார்களானால்அவரோடேகூட பிழைத்திருப்பார்கள் (2தீமோத்2:12). கிறிஸ்துவும் அவருடைய திருச்சபையும், தற்காலத்திலும் நித்தியத்திற்கும் தங்கள் மனித நம்பிக்கைகள் மற்றும் நலன்களுக்கு மரிக்கின்றனர். தங்கள் ஜீவனைக் கையளித்து, நீதியினிமித்தம் துன்பப்படுகின்றனர். அவர்களுக்குக் கிடைக்கும் வெகுமதி இரட்டிப்பானதாகும்.1) தேவதூதர்களைப்போல, ஆனால் இன்னும் மகிமை வாய்ந்த, "துரைத்தனத்துக்கும் அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய்", பரத்திற்குரிய, ஆவிக்குரிய மகிமைக்கு உயரும் அவர்களின் சொந்த உயர்த்தப்படுதல் 2) இராஜ்யத்தின் மகிமையாக – மனிதர்களது மறுசீரமைப்புக்கான தெய்வீக முகவர்களாக இருப்பதன் சந்தோஷம்,

வேதாகமத்தின் இந்தக் கண்ணோட்டத்திலிருந்து, கிறிஸ்தவ போராட்டம் என்பது உலகம் அறிந்த மற்றெல்லா போராட்டங்களிலிருந்தும் வேறுபட்டதாயிருக்கிறது. இது பாவத்திற்கு எதிரான போராட்டம், சுய சித்தத்திற்கு எதிரான போராட்டம், தெய்வீகச் சித்தத்திற்கு முழுமையாக அடிபணிவது. மரணத்தின் மூலம் அடையும் ஒரு வெற்றியாகும். "நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்" (வெளிப்

2:10). "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்"(வெளிப் 3:21). இந்த வகையான ஒரு முன்மொழிவை உலகம் குறைபாட்டுடன் புரிந்துகொள்வதில் எந்த ஆச்சரியமுமில்லை! "உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை" (1யோவான் 3:1). இயேசுவும் அவரைப் பின்பற்றுபவர்களும் உலகத்தால் தவறாகப் புரிந்துகொள்ளப்படுவதற்கு தங்களைச் சமர்ப்பிக்கவேண்டும் என்பது சுவிசேஷம் கோரும் தேவைகளில் ஒன்றாகும். கிறிஸ்துவினிமித்தம் நாம் பைத்தியங்களாக எண்ணப்படுகிறோம் – 1கொரிந் 4:10.

இயேசுவின் அடிச்சுவடுகளை உண்மையாகப் பின்பற்றுபவராக இருப்பதற்கு கொஞ்சம் சகிக்கும்ஆற்றல் தேவைப்படுகிறது. அவருடைய நாளில் இருந்தவர்களால் அவர் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டதைப்போல, இவர்களும் தவறாகப் புரிந்துகொள்ளப்படுவார்கள். அவர் வையப்பட்டதைப் போல வையப்படுவார்கள். "என்னிமித்தம்... பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்கள்"(மத்5:11). கிறிஸ்து மற்றும் அவரைப் பின்பற்றுபவர்களின் இந்தச் சோதனை அனுபவங்களில் ஒரு மகிமையான நோக்கம் உள்ளது என்பதை தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மூலம் நாம் புரிந்துகொள்ளும்போதுதான், அவற்றை சந்தோஷத்துடன் சகித்துக்கொள்ள நம்மால் முடியும். இவர்களுக்கு மாத்திரமே – மகிமை கனம் அழியாமை மற்றும் கர்த்தர் தம்முடைய உண்மையுள்ள பின்னடியார்களுக்கு வாக்களித்துள்ள இராஜ்யம் என, திரைக்கு அப்பாலுள்ள காரியங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடிய விசுவாசக் கண்கள் கர்த்தரால் அருளப்படுகின்றன.

### "ஆட்டுக்குட்டியானவருடைய கோபம்"

இயேசு சமாதானப்பிரபு என்பதால், அவருடைய எதிரிகளைப் பழிவாங்கும் விதமாக, இரத்தக்கறை படிந்த வஸ்திரங்களில் உள்ள ஒரு வல்லமையுள்ள ஜெயவீரரென அவரைக் குறிப்பிடும் பல்வேறு வேதவாக்கியப் பகுதிகளை நம் எவ்வாறு புரிந்துகொள்வது? மேலும் குறிப்பாக, வானத்தின் மேகங்களுடனே அவர் வரும்போது, பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள்(வெளி 1:7) என்கிற அறிவிப்பை நாம் எவ்வாறு புரிந்துகொள்வது?

அவர் குணப்படுத்துவதற்காகக் காயப்படுத்துவார் என்று இந்த சமாதானப்பிரபுவைக் குறித்து கூறப்படுகிறது. அவர் உலகில் எந்தப் பேரழிவுகளைக் கொண்டுவந்தாலும், அல்லது வர அனுமதித்தாலும், அவையனைத்தையும் மாறுவேடத்தில் வந்த ஆசீர்வாதங்களென ஆகுமளவுக்கு அவை மேற்பார்வையிடப்படும். சந்தேகத்திற்கிடமின்றி நமது கர்த்தரைக் குறித்து கூறப்பட்ட அனைத்தும் உயர்மட்ட அடையாளத்திற்குரியதாகும். உதாரணமாக, அவர் தனது வாயிலிருந்து புறப்படும் பட்டயத்தால்– சத்திய வார்த்தையால் அல்லது செய்தியால், தேசங்களை வெட்டுவார் (வெளிப்19:15). பரிசுத்த பேதுரு, பெந்தெகொஸ்தே நாளில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது, அவருடைய பிரசங்கத்தைக் கேட்டுக்கெண்டருந்தவர்களில் சிலர் "இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகினர்" – பரிசுத்த பேதுருவின் சொல்லர்த்தமான பட்டயத்தால் அல்ல, மாறாக, "தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தால்" "இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகினர்". இறுதியில் அந்தப் பட்டயமானது நீதியை எதிர்ப்பவர்கள் அனைவரையும் வெட்டும், அதுவும் அவரவருடைய நன்மைக்காகவே வெட்டும். துணிகரமான தீயவர்கள் மாத்திரமே இறுதியில் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள்.

ஆயினும், மேசியாவின் இராஜ்யத்தின் துவக்கம் உபத்திரவக் காலத்தின் மத்தியில் இருக்கவேண்டும் என்பதையும்,அந்தஉபத்திரவத்தைக் கொண்டவருவதோடு அல்லது குறைந்தபட்சம் அதனை அனுமதிப்பதோடு கிறிஸ்து சம்பந்தப்பட்டிருக்கவேண்டும் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. தெளிவாகவே இந்த யுகத்தின் முடிவில், மனுக்குலத்தார் மாபெரும் உபத்திரவத்தை தங்கள்மீது கொண்டுவர அனுமதிக்கப்படுவார்கள். தீய சக்திகளாகிய சாத்தானும் அவனது தூதர்களும், நமக்குத் தீங்கு செய்யத் தயாராக உள்ளனர். மேலும் மனித சக்திகள் மற்றும் மனித சுபாவத்தில் வேரூன்றிய பாவ சக்திகள் மூலம், சமூகக் கட்டமைப்பிற்குத் தீங்கு செய்யத் தயாராக உள்ளனர். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட சபையார் அனைவரும் தங்கள் நெற்றியில் – தங்கள் புத்தியில், சத்தியத்தைக்கொண்டு முத்திரையிடப்பட நிர்ணயிக்கப்பட்ட காலம் வரையிலும், பூமியின்மீது சேதம் உண்டாக்காதபடி, நான்கு காற்றுக்களை நான்கு தூதர்கள் பிடித்துக்கொள்ளும்படிக்கு, தெய்வீக வல்லமையானது இவற்றைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் என்று வேதாகமம் குறிப்பிடுகின்றது.

தகுந்த நேரத்தில் அந்த கலகத்தின் "காற்றுக்கள்" கட்டவிழ்த்துவிடப்படும். மேலும் ஏற்றகாலத்தில் இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தருமானவர் மனுக்குலத்தை அதனிடமிருந்தும் எதிராளியிடமிருந்தும் மீட்பதற்காக தலையிடும்வரையிலும், உபத்திரவம் மாபெரிதாய் இருக்கும். பின்னர் சாத்தான் ஓராயிரம் வருஷங்கள் கட்டப்பட்டிருப்பான், பூமியிலுள்ள சகல குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் மேசியாவின் இராஜ்யமும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும்.

---------